98 ஆவது அரியாலை

# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலர்

# 2017

நூற்றாண்டை
நோக்கிய
ஆதர்ஷ பயணம்

100 (2019)



12.04.2017 (புதன்கிழமை) இரவு 7.00மணி
கலாசாரவிழா
அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கு

14.04.2017 (வெள்ளிக்கிழமை) ஏவிளம்பி வருடப்பிறப்பன்று மதியம்
விளையாட்டு விழா 1.30மணி
அரியாலை சனசமூக நிலைய மைதானம்

14.04.2017 (வெள்ளிக்கிழமை) ஏவிளம்பி வருடப்பிறப்பன்று இரவு 7.30 மணி
கலைப்பெருவிழா
அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய விஸ்வநாதன் கலையரங்கு

# அரியாலை
# 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலர்
# 2017

## சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் – நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் – வையகத்தின்
பாரிய சுதேசிய திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் – தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று – பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் – கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் – இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே – அழகினில்
ஆடிக் களித்திடும் நாள்

காலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்தே தீந்தமிழ் – அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

**ஆக்கம் : அரியாலையூர், கவிஞர் வே. ஐயாத்துரை**

# 98 வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2017
# 98 TH ARIYALAI NATIONAL DAY CELEBRATION - 2017

**ARIYALAI, JAFFNA**

| President | Treasurer | Hon. Secretary |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | கௌரவ செயலாளர் |
| திருமதி ஶ்ரீ ஆனந்தகுமாரசாமி | திரு. வை. கிருபாகரன் | திரு. கு. பிரதீபன் |
| 0774455899 | 0776102405 | 0772367527 |

சிரேஷ்ட உபதலைவர்
திரு. இ. பிரதீபன்

உபதலைவர் [கலை]
திரு. சு. செல்வரத்தினம்

உபதலைவர் [விளையாட்டு]
திரு. ந. சுதேஸ்குமார்

உபசெயலாளர் [கலை]
திருமதி. ச. திருஞானம்

உபசெயலாளர் [விளையாட்டு]
திரு. உ. தர்மேந்திரன்

உபபொருளாளர் [கலை]
திருமதி. சா. விக்னேஸ்வரன்

உபபொருளாளர் [விளையாட்டு]
திரு. த. பிரணவராவ்

நாடகப் பொறுப்பாளர்
திரு. இ. சடகோபன்

நிதி அபிவிருத்தி குழு
திரு. செ. பத்மநாதன்
Prof. சு. மோகனதாஸ்
திருமதி. ர. விஜயலட்சுமி
திரு. சு. சண்முகரட்ணம்
திரு. அ. உபயசேகரம்

நிர்வாக உறுப்பினர் [கலை]
திரு. செ.சத்தியசீலன்
Dr. திருமதி. ச. அருண்பாபு
திருமதி. சு. லிங்கநாதன்

நிர்வாக உறுப்பினர் [விளையாட்டு]
திரு. ச. பஞ்சலிங்கம்
திரு. S.K. சண்முகலிங்கம்
திரு. தி. பிரதீப்
திரு. க. நாகேந்திரதாஸ்

கௌரவ கணக்காய்வாளர்
திரு.ஐ.சங்கர்

## ஆலோசனைக்குழு

திரு. C. பத்மநாதன்
திரு.K. கனகசபாபதி
திரு.T. பிரதீபன்
திரு. S.Cசெல்வராசா
திரு.U.தர்மேந்திரன்
திரு. S.T பத்மநாதன்
திரு. N. சுதேஸ்குமார்

## மலர்க்குழு

திருமதி ஶ்ரீ ஆனந்தகுமாராசாமி
திரு.கு.பிரதீபன்
திருமதி ச.திருஞானம்
திரு.வை கிருபகாரன்

எமது அரியாலை மக்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்

நிர்வாகக் குழுவினர்
அரியாலை 98ஆவது சு.தி.கொ.விழா

## அரியாலை 98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் நிர்வாகசபை உறுப்பினர்கள் -2017



இருப்போர் (இடமிருந்து வலம்) : திரு.வை.கிருபாகரன்(பொருளாளர்), திரு.பொ.பஞ்சலிங்கம் , திரு.செ.பத்மநாதன், திரு.ந.சுதேஸ்குமார், திரு.கு.பிரதீபன் (பொதுச்செயலாளர்), திருமதி.ஸ்ரீ.ஆனந்தகுமாரசாமி (தலைவர்), திருமதி.ச.திருஞானம், பேராசிரியர்.சு.மோகனதாஸ், திரு.சி.செல்வரட்ணம், திருமதி.சா.விக்னேஸ்வரன்

நிற்பவர்கள் : Dr.திருமதி.ச.அருணபாபு, திருமதி.ர.விஜயலட்சுமி, திரு.தி.பிரதீப், திரு.எஸ்.கே.சண்முகலிங்கம், திரு.க.நாகேந்திரதாஸ், திரு.செ.சத்தியசீலன், திரு.சு.சண்முகரட்ணம், திருமதி.சு.லிங்கநாதன்

சமூகமளிக்காதோர் : திரு.அ.உதயசேகரம், திரு.த.பிரதீபன்(சிரேஷ்ட உபதலைவர்), திரு.உ.தர்மேந்திரன், திரு.த.பிரணவராவ் திரு.இ.சடகோபன்

## 97ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா
## நிகழ்வுகளின் பதிவுகளில் சில...



# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் தலைவர்
திருமதி. ஸ்ரீ.ஆனந்தகுமாரசாமி
BA(Hons)(Lit),M.A(Ling) Dip in Teacher Training
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

என் அன்புக்கு பாத்திரமான அரியாலையூர் மக்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தையும், புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அரியாலை 98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கு தலைவராக என்னைத் தெரிவு செய்த மக்களின் நம்பிக்கைக்கு தலைசாய்த்து இவ்விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல பரம்பொருளின் அருளையும், எம்முன்னோர், மூத்தோர், பெரியோரது ஆசியினையும் வேண்டி நிற்கின்றேன். சமுதாய விழிப்புணர்வுடனும், தூரநோக்குடனும் அரியாலையூர் பெரும்மக்களால் 1919இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவானது இன்றைய காலகட்டத்தில் அவசிய தேவையான சமூகஒருமைப்பாடு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பெரியோரைக் கனம்பண்ணல், சகபாடிகளின் உணர்வுகளை மதித்தல், ஆகிய சீரிய நெறிகளையும் தலைமைத்துவம், தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல், கூட்டுறவாக இயங்குதல், வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளல், சவால்களை எதிர்கொள்ளல், ஆகிய விஷேட பண்புகளையும் இளம் சமுதாயத்தினரிடையே வளர்க்கும் களமாக அமைந்துள்ளது.

நூற்றாண்டை நோக்கிய ஆதர்ஷ பயணம் திடமானதாகவும், ஆரோக்கிய மானதாகவும் முன்னேறி வருகின்றது. கலை, விளையாட்டுப் போட்டிகள் உள்ளூர் மட்டத்தில் மட்டுமன்றி மாவட்ட மட்டத்திலும் நடாத்தி வருவதுடன் எதிர்வரும் கால்த்தில் உளகளாவிய ரீதியில் இப்போட்டிகளை நடாத்துவது எமது திட்டமாகும். எமது சுதேசிய திருநாள் மானிடம் உள்ளளவும் சுதேசிய உணர்வுடன் எமது வருங்கால சந்ததியினரால் பேணப்பட வேண்டும் என்பதே எமது பெரும் அவா.

யாழ்ப்பாணத் தமிழ்ர்களின் கலாசாரத்தைப் பேணும் வகையில், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம் போடுதல், சங்கீதம், நடனம், சித்திரம், ஊமம் நடிப்பு, கிராமிய சம்பாசஷணை, நாடகம், உள்ளடங்களாக பல போட்டிகளும், சமகால கலாசாரத்தை உள்வாங்கி 'Super Singer' வடமாகணத்தில் சிறந்த பாடகருக்கான தெரிவுப்போட்டி, சமகால சமூகநாடகப் போட்டி, போன்ற போட்டிகளையும் அறிவு, திறன் போட்டிக்கான பொதுஅறிவு, சமயஅறிவு, மொழித்திறன், திருக்குறள், கட்டுரை, பேச்சு, சிறுகதை போன்வற்றையும் ஆங்கில

மொழிப்புலமையை ஊக்குவிக்க மொழித்திறன், கட்டுரை, ஒப்புவித்தல் (Recitation)போன்ற போட்டிகளை நடாத்துவதுடன் தமிழர் தம் பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கெந்தியடித்தல், கபடி, போர்த்தேங்காய் அடித்தல், வழுமரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டிடைத்தல் போன்ற போட்டிகளும், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற பெருவிளையாட்டுக்களும், சகல தூர ஓட்டங்கள், சைக்கிள் ஓட்டம், சங்கீதக்கதிரை, கயிறுழுத்தல் போன்ற போட்டிகளும் என ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு மேலாக முன்னோடி கலை, விளையாட்டுப் போட்டிகளும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும், மின்னொளியில் விளையாட்டுப் போட்டிகளும், பகல்நேர விளையாட்டுப்போட்டிகளும் என ஊரே இவ்விரு மாதமும் களைகட்டுவது வழமை. இவ்விழா வருடப்பிறப்பன்று இரவு பிரம்மாண்டமான கலை நிகழ்வுடன் நிறைவிற்கு வந்து வருடம் முழுமைக்கும் பசுமையாய் நிறைவாக்கும்.

இச்சந்தர்ப்பத்தில் 98ஆவது அரியாலை சுதேசிய தின கொண்டாட்ட விழாவில் 12ம் திகதி நடைபெற்ற கலாசார விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தவர் அரியாலையூரின் சமூகசேவையாளரும், பிரபல்யமான கணித ஆசனுமாக திரு.மு.விஸ்வநாதன் அவர்கள் அதே போல் 14ஆம் திகதி ஏவிளம்பி புதுவருடப்பிறப்பன்று நடைபெறும் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக அரியாலை அன்னையின் பிள்ளையும் சிறந்த விளையாட்டு வீராங்கனையும் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறை அலகும் போதனாசிரியர் செல்வி.இராதை அருளம்பலம் அவர்களும் சிறப்பு விருந்தினராக யாழ் நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், க.மயூரன் அவர்களுக்கும் 14ஆம் திகதி இரவு நடைபெறும் பிரம்மாண்டமான கலை விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் வடமாகாண ஆளநரின் செயலாளர் திருவாளர். இளங்கோவன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். திரு.தி.இளங்கோவன் BSc, MSc பட்டங்களை சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் பொது டிப்ளோமாக் கல்வியை ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக் கழகத்திலும் சட்டமாணி பட்டத்தை இலங்கை திறந்த பல்கைலைக்கழகத்திலும் சமூகவியல் முதுமாணிப்பட்டத்தினை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் கற்றுத் தேர்ந்த சிறந்த கல்விமானாவார். இவர் இலங்கையின் பல பாகங்களிலும் பல்வேறு பதவிகளை வகித்த சிறந்த நிர்வாகி, எல்லோருடனும் மென்மையாகப் பழகும் எளிமையானவர், இனிமையானவர் இத்தகைய பெருமை வாய்ந்த ஒருவர் எமது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமை எமக்கெல்லாம் பெருமையே. அதுமட்டுமல்லாது எமது ஊர் மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சியே.

எமது சிறப்பு விருந்தினர் திர.வி.சுதாகர் அவர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளராகக் கடமையாற்றுகின்றார்.இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் Civil Engineering பட்டப்பை பூர்த்தி செய்தவர். அரியாலையின் பெருமையை உயர்திடும் இவர் சிறந்த ஊர்ப்பற்றும் மிக்கவர்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் ஊரவர்களின் உடல், உள, பங்களிப்புடனும், நிதிப்பங்களிப்புடனும், வர்த்தகப் பிரமுகர்கள், நலன்விரும்பிகள் ஆதரவுடன் பல இலட்சங்கள் செலவில் பிரமாண்டமாக நடாத்தப்படும் இவ்விழாவில் எம்மூர் கல்வியாளர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், சமூக சேவையாளர்கள், மற்றும் க.பொ.த(சாதாரண தர,உயர்தர) பரீட்சையில் அதிசிறப்புப் பெற்ற (9A,3A) எம்மூர் மாணவர்களும் ஆண்டுதோறும் கௌரவிக்கப்படுவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சிறுவர்,இளைஞர் முதியோர் சகலரையும் இணைத்து உத்வேகமளிக்கும் எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட சிறப்புற நடைபெற உதவுகின்ற ஒவ்வொரு நல்லுள்ளத்திற்கும், நிர்வாகசபை அங்கத்தவர்களுக்கும், தலைவர் என்ற ரீதியில் நன்றிகளைக் கூறி அமைக்கின்றேன்.

திருமதி.ஸ்ரீ.ஆனந்தகுமாரசாமி

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் செயலாளர்
திரு.குணரட்ணம் பிரதீபன்
BBA(HRM Spl)
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

என் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய அரியாலையூர் மக்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சிய டைகின்றேன். ஒரு நாட்டின் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கு சமூகமூலதனம் மிகவும் சிறப்பாக அமைய வேண்டும் எந்தவொரு மூலதனம் காணப்படினும் சமூகமூலதனம் சிறப்பாக அமையாதவிடத்து நாட்டின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் பாதிப்படையும் இலங்கையின் கலாசாரத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் சமூகமூலதனம் சீரழியுமாயின் அது எமது நாட்டுக்கு மட்டுமன்றி உலகப் பொருளாதாரத்திற்கும் பாதகமாக அமையும்.

வரட்டு கௌரவம் ,விட்டுக் கொடுப்பின்மை ,ஒற்றுமையின்மை, பிரதேசவாதம், கல்லாமை, பெரியோரை மதியாத்தன்மை எல்லாம் ஒரு இனத்தின் வீழ்ச்சிக்கு அடிகோலும் என்பது வரலாற்று உண்மை. எனவே இத்தகைய குறுகிய மனப்பாங்குகளிலிருந்து விடுபட்டு ஊரின் வளர்சியினூடாக அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு அரியாலை அன்னையையும் இலங்கைத் திருநாட்டையும் கட்டியெழுப்பும் நோக்குடன் எமது முன்னோரால் உருவாக்கப்பட்ட ஒரு சமூகமூலதனமே இந்த அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாகும் இவ்விழா 98 ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு நூற்றாண்டை நோக்கிப்பயணிக்கின்றது இத்தகைய பெருமை, ஒற்றுமையக இயங்கும் செயற்பாடு வேறு எந்தவொரு கிராமத்திலும் காணப்படாமல் அரியாலையில் மட்டும் காணப்படுவதை எண்ணி ஊர்மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சிய டைகின்றேன்.

சிறுவயதிலிருந்து என் ஆளுமையை வளர்ப்பதில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பங்கு அதிகமாவுள்ளது அது மட்டுமல்லாது சனசமூக நிலையங்களின் பங்களிப்பும் இருந்தது. அரியாலையிலிருந்து பல கல்விமான்கள் ,விளையாட்டு வீரர்கள் ,உயர் அதிகாரிகள் என பல்துறை ஆளுமைமிக்கவர்கள் உருவாகியமைக்கு இத்தகைய சனசமூக நிலையங்களினதும், சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினதும் பங்களிப்பும் அத்திபாரமாக அமைகின்றது. அரியாலை மீது அதீத பற்றும் விசுவாசமும் அரியாலையை வளர்ப்பதில் பெரும்பங்காற்றியவர்கள் வரிசையில் முன்னாள் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் மதிப்புக்குரிய செ.பத்மநாதன், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், ஓய்வுபெற்ற உபஅதிபர் திரு.அ.உபயசேகரம் அரியாலை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக செயற்படும் அரியாலை அபிவிருத்திச் சங்கத்தில் நீண்ட காலமாக தலைவராக இருந்து அரியாலைக்கு சேவையாற்றிய முன்னாள் அரியாலை

சங்கத் தலைவர் திரு.S.T.பத்மநாதன், சிறந்த தலைமைத்துவப் பண்புமிக்க அமரர் S.T.கணநாதன் மற்றும் முன்னாள் வடமாகாணத் துடுப்பாட்டப்பயிற்றுவிப்பாளராக இருந்த திரு.V.K.சண்முகலிங்கம் போன்றவர்களை ஒரு மாதிரி(Model)யாகக் கொண்டு அரியாலையில் பற்றும் பாசமும் உடையவனாக அரியாலையை வளர்க்க வேண்டும் என்பது என் சிறுவயதிலிருந்தான ஆசை அதன் அடிப்படையில் என்னால் வழங்கக் கூடிய ஒத்துழைப் புக்களை அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவிற்கு வழங்க வேண்டும் என்பதற்காக 2008ம் ஆண்டு என்னை 89ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாப் பொருளாளராக தெரிவு செய்த போது அதனை ஏற்றேன், பின்னர் கடந்த எட்டு வருடங்களாக வெளியூர் வேலைப்பழு காரணமாக சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகத்தில் என் செயற்பாடுகளை வழங்க முடியாது போனது மீண்டும் 98ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பொதுச் செயலாளராக என்னைத் தெரிவு செய்து எனக்கும் சுதேசியனாவதற்குச் சந்தர்ப்பம் வழங்கியதற்கு என் ஊர்மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

என்னுடன் இணைத்து உழைத்த அனைத்து நிர்வாக உறுப்பினர்களுக்கும் தேவையான ஆலோசனைகளை எனக்கு வழங்கி என்னை வழிப்படுத்திய மதிப்புக்குரிய செ.பத்மநாதன், பேராசிரியர் சு.மோகனதாஸ், ஓய்வுபெற்ற உபஅதிபர். திரு.அ.உபயசேகரம், ஆகியோருக்கும் நிதி உதவியளித்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும், அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றி போட்டிகளைச் சிறப்பித்த போட்டியாளர்கள்,பெற்றோர்கள், நடுவர்கள் ,போட்டி ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகஉறுப்பினர்கள்,அனைத்து அங்கத்துவ சனசமூக நிலையங்களுக்கும் மற்றும் சகல நல்லுள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது விரிவான நன்றியுரை 2018ஆம் ஆண்டு விழா மலரில் அமையும். அதுவரை மீண்டும் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைக் கூறி வாழ்த்தி நிற்கின்றேன்.

"அரியாலை ஊருக்கொரு பெருவிழா அது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா" இத்தகையதொருவிழா நூற்றாண்டை அண்மித்திருப்பது அரியாலையின் மீது பற்றும் விசுவாசமும் கொண்ட அனைவருக்கும் பெருமகிழ்ச்சியே" –

திரு. குணரட்ணம் பிரதீபன்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பொருளாளர்
திரு. வை. கிருபாகரன்BBA
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

என் அன்புக்கு பாத்திரமான அரியாலையூர் மக்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தையும், புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். 1919ஆம் ஆண்டு எமது சுதேசிய உணர்வை வளர்ப்பதற்காகவும் எமது ஊரின் ஒற்றுமையூடாக அந்நிய ஆட்சியில் அழிவுற இருந்த எமது சைவம், பண்பாடு, விழுமியம், கலாசாரம் என்பனவற்றை வளர்ப்பதற்காகவும் எமது முன்னோரால் நல்லதொரு சிந்தையில் உருவாக்கப்பட்ட சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது இன்னமும் இரண்டாண்டில் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள நிலையில் 97, 98, ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்குழுவின் பொருளாளராக தெரிவு செய்த உங்கள் நம்பிக்கைக்கு சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

சுதேசிய விழாவானது எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள், கலை என்பவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிகழ்வுகளை ஒழுங்கமைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம். சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுடன் எமது பாரம்பரிய விளையாட்டுக்களையும் வளர்த்திட வேண்டும். அத்துடன் சிலரது அகத்தில் உள்ள பிரிவினை கலைந்து பரந்துபட்ட ரீதியாக ஒரே அமைப்பின் கீழ் ஒற்றுமையுடன் இது ஒரு சமூகத்தின் நிகழ்வு அல்ல இது ஓர் இனத்தின் இருப்பினை பாதுகாக்கும் நிகழ்வு என்ற அடிப்படையில் தூர, நோக்கில் செயல்பட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

98வது சுதேசிய விழாவானது சிறப்பிப்பதற்கு கேட்டவுடன் மன மகிழ்வுடன், தாராளமாக நிதி வழங்கிய எம்மூர் மக்களுக்கும், நோர்வே, லண்டன், கனடா, பிரான்ஸ் வாழ் எம்மூர் மக்களுக்கும், வர்த்தக நிறுவனங்கள், மற்றும் எம்மூர் அல்லாத வர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். விழா சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எல்லோருக்கும் எமது இதயம் கனிந்த தமிழ் புத்தாணடு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வை. கிருபாகரன்.

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
கலைக்குழு தலைவர்
திரு.சி.செல்வரத்தினம்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எனது அன்புக்கு பாத்திரமான மக்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்புற நடைபெற இறைவனின் ஆசியை வேண்டுகின்றேன். இவ்விழாவானது இரண்டு வருடங்களில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. இவ்விழாவானது உலகமே வியக்கும் வகையில் சிறப்பாக நடைபெற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மாணவர்களுக்கான கலைப்போட்டிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பை வழங்கிய அனைவருக்கும் நன்றி. எமது கலைக்குழுவுடன், பொதுக்குழுவினர் விளையாட்டுக் குழுவினரும் பூரண ஒத்தழைப்பை வழங்கினார்கள். இப்போட்டிகளை நடாத்த நிலையங்களை ஒழுங்குபடுத்தித் தந்த சனசமூக நிலையங்களுக்கும், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள். போட்டிகளுக்கான வினாக்களை உரியமுறையில் தயாரித்துத் தந்ததுடன், விடைத் தாள்களை மதிப்பீடு செய்த ஆசிரியர்களுக்கும் நடுவர்களுக்கும் நன்றிகள். ஆர்வத்துடன் பங்குபற்றிய மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுக்கள். இந்த வருடம் அதிகளவு போட்டியாளர்கள் பங்குபற்றியது சிறப்பு. அடுத்துவரும் ஆண்டுகளில் இப் போட்டியாளர்கள் பலமடங்கால் அதிகரிக்க வேண்டும் என்று ஊர் மக்கள் யாவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சி.செல்வரத்தினம்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
கலைக்குழு செயலாளர்
திருமதி. ச. திருஞானம்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அரியாலை வாழ் மக்கள் அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இம் முறை 98வது சுதசிய திருநாட் கொண்டாட்ட விழாவாகக் கொண்டாடப்படுகிறது. நூறாவது ஆண்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் இச் சுதேசிய விழாவானது எதிர்வரும் காலங்களில் மென்மேலும் மெருகு பெற்றுப் பலநூற்றாண்டுகள் காண வேண்டும் என்பதே எமது அவா. அத்தோடு இளைய தலைமுறையினர் எப்பொழுதும் ஒற்றுமையாகவும் சுதேசியப் பற்றோடும் ஒன்றாக இணைந்து செயற்படுவதே இவ்விழாவைச் சிறப்பாக கொண்டாட வழிவகுக்கும். இம்முறை இவ்விழாவின் கலைச் செயலாளராக என்னால் முடிந்தவரை ஓரளவுக்குச் சரியாக செயற்படுவதற்கு எனக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய எமது நிர்வாகத்தினர், போட்டியாளர்கள், பெற்றோர்கள், போட்டி மேற்பார்வையாளர்கள், நடுவர்கள் மற்றும் மண்டப ஒழுங்குகள் செய்து தந்த அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசலை அதிபர், எமது அரியாலை சுதேசிய சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரித்துக் கொள்வதோடு இவ்விழா சிறப்பாக நடந்தேற இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**"வாழ்க சுதேசியம், வளர்க எம் அரியாலை."**

திருமதி. ச. திருஞானம்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
விளையாட்டுக்குழு தலைவர்
திரு. ந. சுதேஸ்குமார்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அரியாலையின் மக்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து பெருமகிழ்வடைவதுடன் அன்பு கலந்த வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விளையாட்டு என்பது வெறுமனே பார்த்து இரசிப்பதற்காக மட்டும் வைப்பதில்லை. விளையாட்டினூடாக நன்நடத்தை, நேரமுகாமைத்துவம், விட்டுக்கொடுப்பு என்பன வளர்க்கப்படுகின்றன. வெற்றி, தோல்வியை சமமாக மதித்து ஒருவரை ஒருவர் நேசித்து செயற்பட வேண்டும். அரியாலை மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 97 ஆவது விழாவின் தலைவராகவும் 98 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விளையாட்டுக்குழுத் தலைவராகவும் செயற்பட்டு வரும் நான் சில விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன். அரியாலை மண் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது. ஒரு காலத்தில் "பஞ்சலிங்கங்கள்" என்று சொல்லும் பேர் போன ஐந்து லிங்கங்கள் அரியாலை மண்ணுக்கு மட்டுமல்ல இலங்கை மண்ணுக்கும் பெருமை சேர்த்தவர்கள். அதேபோல் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான பாடசாலைகளின் அணிகளிலும், பல்கலைக்கழக அணிகளிலும், தேசிய அணிகளிலும் மிளிர்ந்தவர்கள் பலர் அரியாலை மண்ணில் உள்ளார்கள். அவ்வாறான வீரர்களை உருவாக்குவதில் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பெரிதும் பங்காற்றியுள்ளது. விளையாட்டுக்களை வளர்ப்பதனூடாக நேர்மை, உண்மை போன்றவற்றை வளர்க்க உதவியுள்ளது. எனவே வளர்ந்து வரும் இளைய சமுதாயம் இதனை உணர்ந்து அரியாலையை வளர்க்க கூடியவர்களாக அரியாலையின் புகழைப் பரப்பக்கூடியவர்களாக ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இயன்றவரை அரியாலையின் பிள்ளைகளை வளர்ப்பவராக உள்ளூர் கழகங்கள் தமது வீரர்களைப் போட்டிகளுக்கு அனுப்பும் போது அரியாலையைச் சேர்ந்தவர்களை அனுப்பி அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இன்று நான் சர்வதேச ரீதியான ஒரு நடுவராக வருவதற்கு எனக்கு அடித்தளமிட்டவர் என் தாய்மாமா முன்னாள் வடமாகாண துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர் திரு. V.K.சண்முகலிங்கம் அவர்களே. அவருடன் இணைந்து எனக்கு அனைத்து சனசமூக நிலைய மைதானங்களும் ஆளுமை வளர்ப்பில் உதவின. எனவே நாம் அரியாலை மக்கள், அரியாலை சுதேசிகள் என்னும் உணர்வுடன் வாழவேண்டும். இவ்வருடம் 98 ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நிர்வாகம் நல்லதொரு தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் என பலரையும் கொண்டு எல்லா நிகழ்வுகளையும் சிறப்பாக கொண்டாடிவருகிறது. இனிவரும் காலங்களிலும் குறிப்பாக நூற்றாண்டிலும் அனைவரும் ஒற்றுமையாக ஒருதாய் பிள்ளையாக வாழ்ந்து பல நூற்றாண்டுகள் காண்போமாக.

ந.சுதேஸ்குமார்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
விளையாட்டுக்குழு செயலாளர்
உ. தர்மேந்திரன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்கள் யாவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களும் வணக்கங்களும்

அரியாலை மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் நானும் ஒரு பங்காளி என்ற ரீதியில் பெருமகிழ்வடைகின்றேன். அரியாலை மக்களின் திறன்களை வளர்ப்பதற்கு களம் அமைத்துக் கொடுப்பதில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா பெரும் பங்காற்றுகின்றது. கணனியுலகில் சிக்குண்டு மைதானத்தை மறந்து போகும் மக்களுக்கு மைதானத்தில் ஆரோக்கிய வாழ்வு உண்டு என்பதனை விளக்குவதற்கு ஏற்றால் போல் எமது விளையாட்டு விழாக்கள் திட்டமிட்டு வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ்விழாவில் பங்குபற்றிய சகல உள்ளூர், வெளியூர் கழகங்களுக்கும் போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றியவர்களுக்கும் ஒத்துழைப்புக்களை வழங்கி தமது முழு வேலையாக இதனை நடாத்திச் சென்ற விளையாட்டுக் குழுத் தலைவர் ந. சுரேஸ்குமார் அவர்களுக்கும், அனைத்து போட்டிகளிலும் உதவிகளை வழங்கிய திரு. செ. சத்தியசீலன் அவர்கட்கும் 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகக் குழுவினருக்கும் எமது அங்கத்துவ சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கும், மைதானங்களை தந்துதவி போட்டிகளை நடாத்த உதவிய சனசமூக நிலையங்கள் அவற்றின் இளைஞர்கள், யுவதிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரவித்துக் கொள்கின்றேன். நான் என்ற சொல்லை விடுத்து நாம் என்ற சொல்லினூடாக அரியாலையை வளர்ப்போமாக.

**"வாழ்க சுதேசியம் வளர்க அரியாலை**
**வான்புகழோடு வையகத்தே அரியாலை வாழ்க"**

உ. தர்மேந்திரன்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
12.04.2017 இரவு கலாசார விழாவின் பிரதம விருந்தினர்
வாழ்நாள் கணித பேராசான் திரு.மு.விஸ்வநாதன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்களால் தமிழ் வருடப்பிறப்பு தினத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். எமது பிரதேசத்தின் சிறப்பையும், பாரம்பரியத்தையும் கட்டிக்காத்த எமது மூதாதையரின் தீர்க்க தரிசனத்தால் உருவான சுதேசிய விழாவின் 98 ஆவது வருடத்தின் இரவு கலாசார விழாவின் பிரதம விருந்தினராக வருவதையிட்டு நான் பெருமையடைகிறேன்.

அரியாலையின் சுதேசிய பாரம்பரியத்தை வளர்க்கும் நோக்கில் அமைந்த இவ்விழாவில் கலை, விளையாட்டு போன்ற பல்வேறு அம்சங்கள் தொடர்ந்தும் வீறுநடையுடன் வளர்ச்சியடைய வேண்டுமென நான் விரும்புகிறேன். எமது முன்னோர் தேடி வைத்து எமக்களித்த அருஞ்செல்வமாகிய மொழி, பண்பாடு முதலியவற்றை நினைவு கூர்ந்து அவற்றைப் பாதுகாத்து, மேலும் செழுமைப்படுத்த வேண்டியது எமது தலையாய கடன்.

எமது விழாவானது சகிப்புத்தன்மை, ஆளுமைப் பண்புகளை வளர்த்தல், விட்டுக்கொடுத்து நடத்தல், சகோதரத்துவம், குழுச்செயற்பாடு போன்ற சிறந்த பண்புகளை வளர்ப்பதற்கான அடித்தளமாக அமைகின்றது என்று கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் 45 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் பொதுச் செயலாளராகவும் 79 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் தலைவராகவும், 85 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு இருக்கின்றேன் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 87 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாக் குழுவினர் என்னை சமூகசேவைக்காகக் கௌரவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்று வாழ்த்திக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனின் திருவருளையும் வேண்டி நிற்கின்றேன்.

திரு.மு.விஸ்வநாதன்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
14.04.2017 விளையாட்டு விழாவின் பிரதம விருந்தினர்
செல்வி.இராதை அருளம்பலம்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

புதுவருடப்பிறப்பையொட்டி 1919ம் ஆண்டியிலிருந்து வருடாவருடம் அரியாலை மக்களால் பாரம்பரியமாக, ஒற்றுமையோடும் சகோதரத் தன்மையோடும் நட்புறவோடும் மிக விமர்சையாகவும் கோலாகலமாகவும் கொண்டாடப்பட்டு விழாவானது தனது 98ஆவது ஆண்டை இவ்வருடம் கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு நான் அரியாலை மண்ணில் பிறந்ததையிட்டு மிகவும் பெருமைப்படுகின்றேன்.

எமது மூதாதையினரால் தூரநோக்குடன் எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் வகையில் சுதேசிய கலை, கலாசார, கல்வி, விளையாட்டு தரங்களை மேம்படுத்தும் வகையில் முன்னெடுத்த இவ்விழாவானது தனது நூற்றாண்டை இன்னும் இரண்டு வருடங்களில் கொண்டாடப் போவதையிட்டு மிகவும் பெருமையடைவதோடு எழுச்சியாக கொண்டாட எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் போன்றவர்களை கலைஞர்களாகவும் படைப்பாளிகளாகவும் விளையாட்டு வீரர்களாகவும், ஆளுமைமிக்கவர்களாகவும் மாற்றுவதற்கு உள்ளூர் ரீதியாக மட்டுமன்றி வடமாகாண ரீதியாகவும் கலை, கலாசார விளையாட்டு போட்டிகளை நடாத்தி நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் முன் உதாரணமாக இவ்விழா இருப்பதையிட்டு பெருமையிடைகின்றேன். மேலும் நான் சிறுவயதிலிருந்தே. இவ்விழாவில் பங்குபற்றியதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்விழாவிற்கு தமது ஒத்தழைப்பை வழங்கிய அனைத்து பெரியோர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர், சிறுமிகள் எல்லோருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதோடு இவ்விழா மிகவும் சிறப்பாக தொடர்ந்தும் நடைபெற இறைவனை மனதார பிரார்த்திக்கின்றேன். மேலும் எல்லோருக்கும் இனிய வள்மான புத்தாண்டாக இவ்வாண்டு இருக்க வேண்டும் என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழாவானது மனிதநலன்களையும், சமூகஉறவுகளையும் மேம்படுத்துவது மட்டுமன்றி அரியாலை மக்களில் தனித்துவத்தை உலகளாவிய ரீதியில் அடையாளப் படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

செல்வி.இராதை அருளம்பலம்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
14.04.2017 விளையாட்டு விழாவின் சிறப்பு விருந்தினர்
திரு.க.மயூரன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அரியாலை வாழ் மக்களால் வருடாவருடம் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா இவ் வருடம் 98ஆவது வருடத்தில் ஏவிளிம்பி புதுவருடப்பிறப்பிலே நிறைவாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் அரியாலையின் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது நூறாவது ஆண்டை அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விளையாட்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்விழா விளையாட்டு ,கலை போன்ற நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அரியாலை வாழ் இளைஞர், யுவதிகளின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு ஓர் களமாக அமைகின்றது.அத்துடன் அரியாலையிலுள்ள அனைத்து சனசமூக நிலையாங்களும் ஒன்றாக இணைந்து கொண்டாடப்படுவதால் ஒற்றுமையையும், நல்லுறவையும் வளர்ப்பதற்கு ஓர் பலமாக அமைகின்றது இவ்விழாவினைத் தொடர்ந்தும் வருடாந்தம் நடாத்தி ஊரின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஒறுதுணையாக இருக்கவும் இவ்விழா சிறப்பாகவும் நடைபெறவும் மனமார வாழ்த்துகின்றேன்.

திரு.க.மயூரன்

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017



98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
14.04.2017 இரவுக் கலை நிகழ்வின் பிரதம விருந்தினர்
கௌரவ இலட்சுமனன் இளங்கோவன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

தமிழினத்தின் தனித்துவத்தைப் பாரம்பரியமாகப் பேணி வரும் அரியாலை மக்களின் 98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி 'வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

சமுதாயத்தின் சிற்பிகளாக, அதனைக் கட்டியெழுப்பும் நாளைய தலைவர்களாக மிளிரப்போகும் எம் இளைய சமூகத்திற்கு, அந்த சுதேசிய கலாச்சார விழா உத்வேகத்தைத் தரும் என்பதில் எவ்வித ஐயமில்லை. ஏனெனில் நவீனத்துவத்தில் ஊறிப்போன எம் இளையவர்களுக்கு தமிழினத்தின் அடையாளத்தையும், பெருமையையும் கலாச்சாரப் பண்புகளையும் அவ் விழா சாற்றி நிற்கின்றது. கடந்த 97 ஆண்டுகளாக அவர்களால் ஆற்றமுடிந்த சாதனைகளையும், வெற்றிகளையும் பாராட்டுவதுடன், அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

மேலும் எமது இளைஞர்கள் ஒற்றுமையுடனும், குறுகியசிந்தனையுடனும் இன்றி பொது நோக்குடன் செயல்பட இத்தகைய விழாக்கள் வழி கோலுகின்றன. பல்வேறுபட்ட கலாச்சார விழுமியங்கள் பேணப்பட்டு வருவது பாராட்டத்தக்க அம்சமாகும். முன்பள்ளி, விளையாட்டு, சமயம், சிறுகதை, மொழி விருத்தி கதை போன்ற பல்வேறுதுறைகளையும் வளர்ச்சியடையச் செய்யும் விதத்தில் இவர்கள் செய்யும் பணி போற்றுதற்குரியது ஆகும்

எனவே 98ஆவது அரியாலை சுதேசிய திரு நாட் கொண்டாட்ட விழா சிறப்புற அமையவும், அதில் பங்கேற்றுச் . சிறப்பிக்கும் அனைவருக்கும் எமது ஆசியும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

**இ.இளங்கோவன்**
**ஆளுநரின் செயலாளர்**
**ஆளுநர் செயலகம்**
**வடமாகாணம்**

# அரியாலை 98 ஆவது
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2017



**98ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்**
**14.04.2017 இரவுக் கலை நிகழ்வின் சிறப்பு விருந்தினர்**
**திரு.விசுவலிங்கம் சுதாகர் BSc.Eng, C.Eng, MIE(SL)**
**அவர்களின்**

## வாழ்த்துச் செய்தி

இலங்கை பெருந்தீவின், தமிழர் தாயகமாம் வடமாகாணத்தின் தலைநகராம் யாழ்மாவட்டத்தின் வரவேற்பு தோரணமாக விளங்கும் அரியாலை பேரூரின் மக்களால் பாரம்பரியமாக புதுவருடப்பிறப்பன்று கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது இம்முறையும் "ஏவிளம்பி" சித்திரை புதுவருட தினத்தன்று 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாக கொண்டாடப்படுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன்.

இவ்விழாவினுடைய வரலாறுகள் அழிந்துவிடாமல் கட்டிக்காப்பற்ற வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய இளம் தலைமுறையை சார்ந்ததாகும். எமது சைவப்பாரம்பரியம், தமிழ் கலாசாரம் மற்றும் சுதேசியம் இவற்றை பாதுகாக்கும் நோக்கோடு எம் மூதாதையர் 1919 ஆம் ஆண்டிலிருந்து சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவினை ஆண்டுதோறும் வெகு விமர்சையாக கொண்டாடிவருகின்றார்கள். அந்தவகையில் இம்முறையும் 98வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்படைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்காலத்தில் எமது இளைஞர்கள் யுவதிகள் புதிய தேடுதல்கள், புதிய சிந்தனைகள், புத்தாக்கங்கள் எதுவுமின்றி சிறிய கைவட்டத்துக்குள் அடக்கப்பட்டுவிட்டனர். கைத் தொலைபேசி, இணையம், தொலைக்காட்சி நாடகங்கள், மற்றும் போதைப்பொருள் பாவனை என்னும் கொடிய அரக்கர்களுக்குள் முடங்கி தங்கள் சுபீட்சமான எதிர்காலத்தை தொலைத்துவிடுகிறார்கள். இவ்வாறு தொடருமானால் எமது அடுத்த சந்தியினர் மிகவும் வேறுபாடான சிந்தனைகளுடனும், வேறுபட்ட தோற்றத்துடனும் உருவாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவோம்.

தற்கால இளைஞர்கள் யுவதிகளை திசைமாற்றி, நல்வழிப்படுத்தி சமூகக்கூட்டுறவுடன், விட்டுக்கொடுப்பு, தன்னம்பிக்கையுடன் கூடிய புதிய சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை இந்த சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு உள்ளது என்பதை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

சகல நிகழ்ச்சிகளிலும் அரியாலையூரின் இளைஞர்கள், யுவதிகளை ஈடுபட வைப்பதன் மூலமும், சகலரையும் பங்குபற்ற வைப்பதன் மூலமும் சிறந்த சமுதாய்த்தை உருவாக்க முடியும். சனசமூக நிலையங்களின் சலக செயற்பாடுகளிலும் எமது பிள்ளைகளை

இளைஞர்களை அவ்வட்டத்திலிருந்து வெளிக்கொணர முடியும் என பெற்றோரிடம் வேண்டிகொள்கின்றேன். வரலாற்றை திரும்பி பார்க்கையில் விளையாட்டுக்கள், நாடகங்கள், கலாசார நிகழ்வுகள், கல்வி எல்லாவற்றுக்கும் பெயர் பெற்ற ஊர் அரியாலையூர் மட்டுமே.

இன்னும் எத்தனையோ பல சிறப்புகளுக்குரிய எமது "சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா" இன்னும் இருவருடங்களில் நூற்றாண்டை கொண்டாட உள்ள வேளையில், இரவுகலை நிகழ்வுகளுக்கு சிறப்பு விருந்தினராக என்னை அழைத்து கௌவித்தமைக்காக, விழா நிர்வாகத்தினருக்கும், அரியாலையூர் மக்களுக்கும் எமது நன்றியை தெரிவிப்பதோடு விழா சிறப்புற எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகரையும், சகல சௌபாக்கியங்களையும் அருளும் அன்னை மகாமாரி அம்மனையும் வேண்டி, இவ்விழா சிறப்புற வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.Eng.விசுவலிங்கம் சுதாகர்**

# 97வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக் குழுவின் செயலறிக்கை

திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமாரசாமி
பொதுச்செயலாளர்
அரியாலை 97ஆவது சு.தி.கொ.விழா

97வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா செயற்குழு 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை பிரதிநிதிகள் சபையால் தெரிவு செய்யப்பட்டு திரு. ந. சுதேஸ்குமார் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றது.

1) நிர்வாகக் குழுக் கூட்டங்கள் :- வருடப்பிறப்பிற்கு முன்னர் நான்கு கூட்டங்கள் வெவ்வேறு சன சமூக நிலையங்களிலும் நடத்தப்பட்டது. சகல சன சமூக நிலையங்களும் வேண்டிய ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

2) நிதி வசூலிப்பு :- பொருளாளர், தலைவர் இருவரும் முக்கிய பங்கு எடுத்து உள்ளூர் நிதி சேகரிப்பை முடுக்கி விட்டமை முக்கியமான விடயமாகும். வெளிநாட்டு அரியாலை வாசிகளுடன் செயலாளர் தொடர்பு கொண்டு நிதி சேகரிப்பை மேற்கொண்டார்.

3) கலைப்போட்டி :- கலைப் போட்டிகள் யாவும் கலைத் தலைவர், செயலாளர் மற்றும் கலைக்குழவின் ஒத்தழைப்புடன் சிறப்பாக நடந்தேறியது.

4) விளையாட்டுப் போட்டிகள் :- திட்டமிட்டப்படி போட்டிகள் 97வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத்தலைவர் திரு. ந.சுதேஸ்குமாரின் முழுமையான பங்களிப்புடன் நடந்தேறின.

5) Super Singer :- நோர்வே வாழ் மக்களின் வேண்டுகோள் பிரகாரம் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்ட போதும் நிர்வாகக் குழு செயலாளர் தலைமையில் ஆறு சுற்றுக்களை சனசமூக நிலையங்களில் சிறப்பாக நடத்தியது. சகல இடங்களிலும் பெருந்தொகையான மக்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டு உற்சாகமூட்டியது முக்கியமான விடயமாகும்.

6) வாண வேடிக்கை :- இந்நிகழ்வானது பல்வேறு கருத்து வேறுபாடு இருந்த போதிலும் தவிர்க்க முடியாததாக இருந்தது. 96 நிர்வாகம் நடாத்தியது போன்று 97 நடாத்த வேண்டியிருந்தது. ஆயினும் எதிர்வரும் நிர்வாகங்கள் இந்நிகழ்வை தவிர்க்கலாம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

7) பரிசு வழங்குநர்கள் (Sponsors) :- சகல போட்டிகளுக்குமான பரிசுத்தொகை ஆகக் குறைந்தது 2000 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டு புதிதாக சேகரிக்கப்பட்டது. வெளிநாட்டவர்களுக்கும் சகல போட்டிகளும் அவற்றிற்கான பரிசு தொகையும் ஈமெயில் மூலம் தெரிவிக்கப்பட்டதனால் தனிப்பட்ட வகையில் பலர் முன்வந்து உதவி செய்தனர்.

8) ஆண்டு விழா மலர் :-97வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா மலர் பல சிறப்பம் சங்களை உடையதாக 100 வது ஆண்டு விழாவை நோக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. போட்டியாளர்களின் சிறந்த கட்டுரைகளையும், ஆக்கங்களையும் உள்ளடக்கி இம்மலர் உருவாக்கப்பட்டதுடன், Sponsors விபரமும் முழுமையாக திருத்தி அமைக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு மன்றங்களின் தலைவர்களின் வாழ்த்துரைகளும்,விருந்தினர்களின் ஆசியுரைகளும்

இணைக்கப்பட்டுள்ளது.

9) 100 வது ஆண்டு விழா :- இவ்வழாவை சிறப்பாக நடாத்த வேண்டும் என்று உணர்வை வெளிநாட்டு உறவுகள் மிகுந்த ஆவலாக உள்ளனர். அண்மையில் கனடா வாழ் திரு. ஸ்ரீஸ்கந்தன் அவர்கள் கரடிகடை காணியை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கான காணியாக மாற்றுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

## சவால்கள்

1) பிரச்சினையாக எமது நிர்வாகத்தால் உணரப்பட்டது. எமது இளைஞர் சமுதாயத்திடம் காணப்படுகின்ற போட்டி மனப்பான்மை ஒற்றுமையை வளர்க்க எமது முதாதையர் ஆரம்பித்த விழா இளைஞர்களிடையே போட்டியையும் ego வையும் வளர்ப்பதாக எம்மால் உணரப்பட்டுள்ளது. அவசியம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

2) விளையாட்டுப் போட்டிகள் யாவும் 97வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாத்தலைவர் ந.சுதேஸ்குமார் அவர்களின் திறமையால் நடாத்தப்பட்டது மறக்க முடியாதது. விளையாட்டுத் தலைவர், குழுவின் ஒத்துழைப்பு மிக அரிதாகவே கிடைத்தது.

3) வங்கிக் கணக்கு - சுதேசிய திருநாட் கொண்டாட்டவங்கிக் கணக்கை எமது நிர்வாகம் கையாள முடியாது போனது எமது துர்ப்பாக்கியம். ஆலோசனைச் சபைக்கு இவ்விடயம் பலமுறை எழுத்து மூலமும், வாய்மூலமும் வழங்கப்பட்டபோதும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை.

4) நிதி வசூலிப்புப் பொருளாளர் 96வது ஆண்டு விழாக் கணக்கறிக்கை பொதுக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமையால் மக்களிடையே பெரும் சிக்கல்களை எதிர்நோக்கினார். அத்துடன், வெளிநாட்டில் நிதி திரட்ட முயன்ற போதும் எமது உள்நாட்டு உறவுகள் பல்வேறு தறவான தகவல்களை வழங்கி எமக்கு முட்டுக்கட்டை போட்டமை பெரும் சவாலாகும்.

## தீர்வு

1) இளைஞர்கள் தமது கருத்துக்களை வெளிக்கொணர்ந்து தமக்கிடையே உள்ள போட்டிகளை மறந்து எமது என்ற உணர்வுடன் இணைந்து செயற்பாட்டால் மட்டுமே வெற்றி பெற முடியும். பெரியவர்களாகிய நாமும் இளைஞர்களின் கருத்துக்களை மதித்து இணங்கி நடக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

## எதிர்கால நோக்குகள்

1) 100 வது ஆண்டு விழாவிற்கான திட்டமிடல்.

2) கனடாவிலிருந்து திரு. ப. ஸ்ரீஸ்கந்தன் அவர்களால் முன்னெடுக்கப்படும் காணித்திட்டம் - 08.01.2017 அன்று அனுப்பப்பட்ட ஈமெயில் I am doing some necessary paper work we need to demolish the building and secure the place. since we Haven't started collection is it possible to give us some funds to start the work from the national day balance.
Regards, sriskanthan

திருமதி. ஸ்ரீ.ஆனந்தகுமாரசாமி
செயலாளர்
அரியாலை 97ஆவது சு.தி.கொ.விழா



அனைத்து வகை அத்தியாவசியப் பொருட்கள், குளிர்பான வகைகள்,
ஐஸ்கீறீம் வகைகள், அலங்காரப்பொருட்கள் மற்றும் பாடசாலை அலுவலக உபகரணங்கள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
AMPAAL
Prop: N.Kajanthan (Prabhu)
0776383776
448, Kandy Road,
Ariyalai, Jaffna




நவம்
கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்
மற்றும் ரிப்பர் போக்குவரத்து சேவை
689, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 302 7363




Soruban Travels
Contact : 077 238 0203
21, Brudi Lane, Ariyalai, Jaffna.


A.S MEDI CLINIC
A.S மெடி கிளினிக்
Dr.A.சர்மிலா
Reg.No: 12766
கிளை : 122/16, நாவலடி
Dr.A.சர்மிலா
Reg.No: 12766
கிளை : 122/16, நாவலடி
இங்கு சகலவ விதமான
நோய்களுக்கும்
சிகிச்சையளிபக்கப்படும்
Tel : 077 228 8266, 077 616 0689


கட்டிடப்பொருட்கள், கம்பி வகைகள், சீமெந்து PVC பைப் வகைகள், பெயின்ற் வகைகள், அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
துவிச்சக்கர வண்டிகள், அதன் உதிரிப்பாங்கள், தொலைக்காட்சி வானொலிப் , டிஸ் அன்ரனா, மற்றும் இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
கஜமுகன் ஹாட்வெயர்
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே : 021 222 2833
021 222 2368
52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்


உங்கள் அமங்கல வைபவங்களுக்கு நாடுங்கள்
E-Sons
ஈ-சன்ஸ்
148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
கிளை : கண்டி வீதி, சாவகச்சேரி
தொ.பே: 021 222 2695

## அரியாலை 98 ஆவது
## சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017
### இங்கிலாந்து வாழ் அரியாலை மக்கள் சார்பாக

**திரு. அருளம்பலம் சிவபாலன்**
அவர்களின்

### வாழ்த்துச் செய்தி

இங்கிலாந்தில் வாழும் அரியாலை வாழ் மக்களாகிய எங்களுக்கு எம் மண், எம் உறவுகள், நண்பர்கள், அயலவர்கள், கலை – கலாசார விளையாட்டு விழாக்கள் என்பன மறக்க முடியாதவை. சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தொடர்ச்சியாக 98வது ஆண்டை ஆண்மிப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சி. வருடா வருடம் நாமும் நிதி வழங்கி பங்கெடுப்பது எமக்கெல்லாம் பெருமை இவ்விழா சிறப்பு எமது வாழ்த்துக்கள். மேலும் நூற்றாண்டு விழாவில் மேலும் சிறப்பான பல புதிய நிகழ்ச்சிகள் நடைபெறும் என எண்ணுகின்றோம்.

---



## அரியாலை 98 ஆவது
## சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017
### கனடா வாழ் அரியாலை மக்கள் சார்பாக

**திரு. ஶ்ரீஸ்கந்தன்**
அவர்களின்

### வாழ்த்துச் செய்தி

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா என்று நினைத்தாலே உள்ளம் உவகை கொள்ளும். அரியாலைக்கே உரிய சிறப்பு இவ் சுதேசிய தின விழா. 1919ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விழா நிலை குலையாது இவ்வருடமும் 98வது விழாவாக கொண்டாடப்படுவது எமக்கெல்லாம் மகிழ்ச்சி. எங்கள் நினைவுகள் உங்கள் மேல் இருப்பது போல எங்கள் ஆதரவும் என்றும் உங்களுக்கே. 98ஆவது விழா சிறக்க கனடா வாழ் மக்கள் சார்பாக எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு எங்களையும் பங்காளிகளாக்கி சுதேசிய உணர்வுடன் இன்னும் விழாவிற்கு ஒரு தாய் பிள்ளைகளாக கலை, விளையாட்டு நிகழ்வுகளில் அனைவரும் ஒற்றுமையாக பங்கேற்பதற்கும் எமது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

## அரியாலை 98 ஆவது
## சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா – 2017
### பிரான்ஸ் வாழ் அரியாலை மக்கள் சார்பாக

**திரு. பவா. சிவானந்தன்**
அவர்களின்

### வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்கள் உலகில் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் புதுவருடம் என்றாலே சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நினைவில் வரும். அண்மையில் நாமும் பிரான்சில் பெரும் சுதேசிய விழா கொண்டாடி மகிழ்ந்தோம். 98வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்பு உமது மனமார்ந்த வாழ்த்துக்கள். சுதேசியம் என்பதே ஒற்றுமை பலம் நாம் என்றும் ஒற்றுமையாக செயற்பட எமது மூத்தோர், முன்னோர் வழி நின்று என்றும் சுதேசியத்தை வழர்த்து நூற்றாண்டை சிறப்பாக கொண்டாடிப் பல நூற்றாண்டுகள் காண உதவுவோமாக.



## 98 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா

**Ariyalai National Day Celeberation**

14.04.2017

வாழ்த்து மடல்

அரியாலை யாழ்ப்பாண மாநகரத்தில் செழிப்புடன் அமைந்திருப்பதுதான் எமது கிராமம். தமிழ்ப் பாரம்பரிய கலைகளான இயல், இசை, நாடகக் கலையைப் பேணிக்காப்பதுடன், பல கலைப் படைப்புகளை நெறிப்படுத்தியதிலும் சிறந்த கலைஞர்களை உருவாக்கியதிலும் காத்திரமான பங்கை வகித்து வருவதை யாரும் மறுக்கமுடியாது.

நமது அரியாலை மண்ணிலே சகல விளையாட்டுக்களை நடாத்தியும் பங்கேற்பது மட்டுமன்றி சிறந்த வீர, வீராங்கனைகளையும் உருவாக்கிய பெருமையும் எமது ஊருக்கு உண்டு.

எமது முன்னோரால் துல்லியமாக தூரநோக்குடன் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பொது நலத்திலும், மக்களின் சுதேசியத்திலும், மக்களிடையே ஐக்கியத்தைப் பேணிக்காப்பதிலும் சிரத்தையுடன் பணிபுரிவது பாராட்டப்படவேண்டியது.

98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டவிழா சிறப்புடன் நிறைவேற அரியாலை மக்கள்மன்றம் நோர்வே மனமார வாழ்த்துகின்றது.

நூறாவது ஆண்டை அண்மிக்கும் இவ்வேளையில் தொடர்ச்சியாக ஊரே முழுமையாக ஒன்றுகூடி ஐக்கியத்துடனும், மக்கள் நலன் சிறக்கவும், அதிவினைத்திறனுடனும் கண்ணியமான நெறிப்படுத்துலடனும் விழா சிறப்புற நடைபெற சேவையாற்ற வேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரியாலை மக்கள் மன்றம் நோர்வே
Ariyalai Makkal Manram Norway

# 98வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2017

# ARIYALAI NATIONAL DAY CELEBRATION -2017

## கலாசார விழா

**காலம்:12.04.2017 புதன்கிழமை இரவு 7.00மணி**

**இடம் :அரியாலை சனசமூக நிலைய அமரர் காசிப்பிள்ளை உள்ளக அரங்கு**

**தலைமை : திரு.த.பிரதீபன்** B.com (Acc Spl) M.Sc

சிரேஸ்ட விரிவுரையாளர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வவுனியா வளாகம்.
(சிரேஸ்ட உபதலைவர் 98ஆவது அரியாலை சு.தி.கொ.விழா-2017)

### பிரதம விருந்தினர்

உயர்திரு.மு.விஸ்வநாதன்
(வாழ்நாள் கணிதப் பேராசான், Director Rubaa Maths Centre)

## நிகழ்ச்சிநிரல்

- மங்கல இசை : அரியாலையூர் யசோதரன் புதல்வர்கள்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- சுதேசிய கீதம் இசைத்தல்
- வரவேற்புரை : திரு.சி.செல்வரத்தினம் கலைத்தலைவர் 98ஆவது அரியாலை சு.தி.கொ.விழா-2017
- தலைமையுரை
- பிரதமவிருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல் (முன்னோடிக்கலைப்போட்டிகளில் பரிசில் பெற்றவர்களுக்கு)
- நன்றியுரை : திருமதி ச.திருஞானம் கலைச் செயலாளர். 98ஆவது அரியாலை சு.தி.கொ.விழா-2017
- 98ஆவது அரியாலை சு.தி.கொ.விழா-2017 இனை முன்னிட்டு நடாத்தப்பட்ட தமிழ், ஆங்கில பேச்சுப்போட்டி,பாப்பாமலர் போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் நிகழ்வுகள்
- கிராமியசம்பாஷணை (வயலும் வாழ்வும்)
- நடனம் : திருமதி சுகந்தினி றஞ்சித்குமாரின் மாணவிகள்
- நாடகம் (நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற அரியாலை திரு நாடக மன்ற B அணியின் "உதாசீனமே உயிராபத்து)"

98ஆவது **அரியாலை சு.தி.கொ.விழா-2017 இன் பிரம்மாண்டமான நிகழ்வு**

**SUPER SINGER -V** இன் அரையிறுதிச் சுற்று

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

| | | |
|---|---|---|
| திரு.சி.செல்வரத்தினம் | திருமதி.சா.விக்னேஸ்வரன் | திருமதி ச.திருஞானம் |
| கலைத்தலைவர் | உப பொருளாளர் (கலை) | கலைச் செயலாளர் |

98ஆவது அரியாலை சு.தி.கொ.விழாக்குழு-2017

# 98வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2017

**13.04.2017 வியாழக்கிழமை காலை மேணிக்கு**

## வடமாகாண மற்றும் உள்ளூர் ரீதியான

வீதியோட்டம்(மரதன்) - **ஆண்கள் மற்றும் பெண்கள் [பொது]**
சைக்கிள் ஓட்டம் - **ஆண்கள் மற்றும் பெண்கள் [பொது]**

## ஆரம்பம்: அரியாலை திறந்த வெளி அரங்கு முன்றல்

(அரியாலை,கண்டிவீதியில் அமைந்துள்ள உதைப்பந்தாட்ட மைதானத்திற்கு முன்)

- உள்ளூர் போட்டியாளர்கள் அரியாலையை பிறப்பிடமாக அல்லது அரியாலையில் நீண்டகாலம் வசிப்பவராக அல்லது அரியாலையினை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- வெளியூர் போட்டியாளர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்

  போட்டியாளர்கள் 13.04.2017 அதிகாலை 5.30ற்குச் சமூகம் தந்து பதிவுகளை மேற்கொண்டு போட்டிக்குத் தயாராதல் வேண்டும்.
- வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்று(தேசிய அடையாள அட்டை / குடும்ப அட்டையின் பிரதி) கொண்டு வருதல் வேண்டும்.

**98ஆவது அரியாலை சு.தி.கொ.விழா–2017 இன் பிரம்மாண்டமான நிகழ்வு**
நோர்வே வாழ் அரியாலை மக்களின் ஆதரவுடன் நோர்வே மக்கள் மன்றத்தின் அனுசரணையில்
நடைபெறும்

## SUPER SINGER -V இன் அரையிறுதிச் சுற்று
## Semi finals

**12.04.2017 புதன்கிழமை இரவு கலாசார விழாவின் போது**
**இடம்: அரியாலை சனசமுக நிலைய அமரர் காசிப்பிள்ளை உள்ளக அரங்கு**

இவ்வாறு கல்வி, விளையாட்டுக்கள் மட்டுமன்றி இனமத வேறுபாடுகளை களையும் முகமாக தைப்பொங்கல், நத்தார் பண்டிகை, சித்திரை புதுவருடப்பிறப்பு கொண்டாட்டங்களை கிராம மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நடத்துகின்றனர். ஆசிரியர் தினம், மகளிர் தினம், முதியோர் தினம் போன்ற நாட்களை விழாவக எடுத்து அந்தந்த தரப்பினை சனசமூக நிலையங்கள் கௌரவப்படுத்தவும் மறந்தது இல்லை.

பாரம்பரியம், பண்பாடுகளைப் பேணும் வகையில் கலாசார நிகழ்வுகள், கிராமிய விளையாட்டுக்கள் போன்றவற்றை மக்கள் மத்தியில் ஒவ்வொரு சனசமூக நிலையமும் தனது அபிவிருத்தியையும் வெற்றியையும் உறுதிப்படுத்துகின்றது. பாட்டுமின்றி இளைஞர்கள் மத்தியில் ஒழிந்திருக்கும் திறமைகளை இவ்வுலகிற்கு வெளிக்காட்டுகின்றன. உதாரணமாக "சிறந்த பாடகர்" என்ற நிகழ்வு மூலம் சமூகத்தில் இலை, மறை காய் போல" காணப்படும் திறமைசாலிகள் வாய்ப்பு பெற்று வெற்றியின் உச்சத்திற்கு செல்லும் பாதையை ஒவ்வொரு சனசமூக நிலையமும் ஏற்படுத்தியுள்ளது என்பது வியத்தகு விடயமே.

இவ்வாறே ஒவ்வொரு தனிமனிதனுக்கும் ஏற்படும் அபிவிருத்தியே பிற்காலத்தில் கிராமத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தியாக உருவெடுக்கின்றது. தன்னலன் பாட்டும் பாராது பிறர் நலன் பாராட்டுதலும் ஒவ்வொரு சனசமூக நிலையமும் தனது கொள்கையாக கொண்டுள்ளது. அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசங்களுக்கு நிவாராண உதவிகளை வழங்குதல், வறிய பிரதேச மக்களுக்கு உணவு, உடை போன்ற தேவைகளை பூர்த்தி செய்தல், பின்தங்கிய கிராம பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை கையளித்தல் போன்ற சமூக நோக்குடன் இவை தொழிற்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையங்கள் தமது அபிவிருத்திச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக மாதாந்தம் கூட்டங்களை நடாத்தி குறை, நிறைகளை பற்றி கலந்துரையாடுகின்றன. ஒரு திட்டமிடல் செயன்முறையுடன் முனைப்பாக ஒவ்வொரு சனசமூக நிலையமும் செயற்பாடு வருவதனை நாம் மறந்துவிடலாகது. மட்டுமின்றி சீர்திருத்தப்படாத வீதிகள், மின்வசதி இல்லாத இடங்களுக்கு தேவையான வசதிகளை அளித்து ஒவ்வொரு சனசமூக நிலையமும் தனது பங்களிப்பை உறுதிப்படுத்துகின்றது.

திறமையாளர்களை ஊக்கப்படுத்துவதை நோக்கமாக கொண்ட இவை கல்வி, விளையாட்டு, சமூக விடயங்களில் வெற்றியீட்டிய சாதனையாளர்களை கௌரவிக்கவும் மறப்பதில்லை. பல்கலை அனுமதி பெற்ற மாணவர்களை கௌரவித்தல், சமூகத்துக்கு தொண்டாற்றிய பெரியோர்களுக்கு கௌரவம் அளித்தல் போன்ற உன்னதமான பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

காலஓட்டத்துக்கு ஏற்ப நாமும் ஓடவேண்டிய தேவை இருப்பதனால் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப மாற வேண்டிய தேவையும் உள்ளது. அதாவது புலம்பெயர்ந் மக்களின் நன்கொடை மூலம் வளர்ச்சி பெற வேண்டிய அனைத்து விடயங்களையும் இனங்கண்டு அவற்றை ஏற்ற வகையில் அபிவிருத்திக்கு இட்டுசெல்கின்ற இந்த சனசமூக நிலையங்கள் இந்த அபிவிருத்தி எதிர்கால நலன்கொண்டது. வளர்ச்சி நிகழ்கால நலன் கொண்டது. வளர்ச்சியையும் தாண்டி கிராமத்தின் அபிவிருத்தியில் எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்திற்கொண்டு இவை செயற்படுவதை நாம் மனதார பாராட்ட வேண்டியுள்ளது. எனினும் சிலர் இவற்றின் சேவைகளை இலவசப் பண்டம் என எண்ணி தூக்கி எறியும் நிலையையும் காண்கின்றோம். "வீதியோரம் காணப்படும் களி மண்ணை பானையாக்குவதும், அப்படியே விட்டு விடுவதும் அதனை பயன்படுத்துபவன் நோக்கிலேயே தங்கியுள்ளது" அவ்வாறே ஒவ்வொரு சனசமூக நிலையத்தையும் வினைத்திறனாக பயன்படுத்தி கிராம அபிவிருத்தியில் பங்களிப்பு செய்வதே எதிர்கால தலைவர்களான எமது தலையாய கடமை ஆகும்.

சனசமூக நிலையங்கள் அனைவரையும் எந்தவித வேறுபாடும் இன்றி ஒன்றாக்கும் ஒரு பொதுவான தளம். ஆனால் அதை சிலர் தவறாக பயன்படுத்துவது வேதனைக்குரிய விடயமே. இதனால் நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தி எனும் வெற்றிக் கனியினை சுவைக்க முடியாமல் போகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இன்றைய கிராமத்தினை நாளைய நகரமாக்குவதற்கே ஒவ்வொரு சனசமூக நிலையமும் பாடுபட்டு வருகின்றது.

கவலை கடலில் மூழ்கி இருக்கும் மக்களை களிப்பு வெள்ளத்திலே மிதக்க வைக்க களியாட்ட நிகழ்வுகள், இசைக்குழு நிகழ்வுகள் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களையும் இவை மேற்கொள்கின்றன. இந்நிகழ்வுகள் மூலம் மக்கள் ஒன்று சேர்வதால் அவர்களின் பகைகள், கோபங்கள் போன்றவை விலகி நல்லுறவு பிணைப்பு ஒன்று உருவாக வழிசமைக்கின்றன. எனவே சனசமூக நிலையங்கள் சார்பில் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயமும் மக்களின் வளர்ச்சியையும் கிராமத்தின் அபிவிருத்தியையும் இலாக்காகக் கொண்டுள்ளன. அவற்றின் இலக்கு ஈடேற எம்மாலான பங்களிப்பை என்றுமே வழங்கி நிற்போமாக!



சிறுகதை

# தாய்மை

மத்திய பிரிவு
சி.அபிநஜா

"ரோகித் .......... எழும்பு ஏழு மணி ஆயிட்டு......... எழும்படி ராசா........ அம்மாவிண்ட செல்லமெல்லே............ எழும்பண......." பாயில் கிடந்து கனவில் மிதந்து கொண்டிருந்த ரோகித்தை எழும்பினாள் கமலா. கணவனை இழந்த கைம்பெண் ரோகித் இவ்வருடம் தரம் 11 படித்துக் கொண்டிருக்கின்றான். குடிசை வீட்டில் அடுப்படிக்கு அருகில் பழஞ்சோற்றை பிசைந்து வைக்கிறாள் கமலா. அதற்கிடையில் ரோகித் குளித்துமுடித்துவிட்டு உட்கார்ந்து பழஞ்சோற்றை சாப்பிட்டுவிட்டு தன் பாடசாலைக்கு செல்கின்றான்.

சிறுவயதிலேயே திருமணமாகி போர் எனும் கொடியவனின் கைகளில் அகப்பட்டு தன் கணவனை இழந்த கமலா வாழ்வினை தனியாக அதுவும் தன் மகனுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். கடையொன்றில் வேலைசெய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டே இவர்களின் அன்றடா சீவியம் ஓடுகின்றது. வழமைபோல் கடையில் வேலைகளை செய்து முடித்துவிட்டு கடையில் சமையலுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி விரைந்தாள். அடுப்பைமூட்டி சமையலை செய்து முடித்த பின் தனது மகனுக்காக வீட்டு வாசலை நோக்கியபடி விறாந்தையில் அமர்ந்திருக்கின்றாள்.

மணி இரண்டாகிவிட்டது. பிள்ளையோ வீடு திரும்பவில்லை என கமலா குழம்பிக் கொண்டிருக்கையில் வீட்டின் முன் ஒரு பெரியவர் வந்து நின்று" இது ரோகித்தின் வீடா?" என்று வினவுகின்றார். "ஓம்... ஐயா.........." என்றாள் கமலா. "நீங்கள் ரோகித்தின் அம்மாவா..........?" என்று பெரியவர் கேட்க "ஓம்...... ஜா........... நீர்கள் ஆர்.......... என்ட பிள்ளைக்கு என்ன நடந்தது............? என்று பதறியபடி கேட்டாள் கமலா. பெரியவர் தயங்கியபடி "உங்கட பிள்ளைக்கு ரோட்டில் மோட்டார் சைக்கிள் மோதி அக்சிடன்ட் ஆயிட்டு............. பெரியாஸ்பத்திரியில் சேர்த்தனான்........ வந்து பாருங்கோ" என்றவுடன் கமலா இடியேறு கேட்ட நாகம் போல அதிர்ந்தாள். வைத்தியசாலை நோக்கி ஓடோடிச் சென்றாள் தன் மகனைக் கண்டவுடன் குளறிக் குளறி அழுது அப்படியே மயக்கமுற்று நிலத்தில் சரிந்தாள்.

அவளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவள் கண்விழித்த பின் அங்கே நின்ற வைத்தியர் ஒருவர் கமலாவை அழைத்து. "அம்மா......... நான் சொல்லுறதை கேட்டு அதிர்ச்சி ஆகாதையுங்கோ........ உங்களிட மகனுக்கு ஒரு கிட்ணி பெயிலியராப் போச்சு. அவசரமாக ஒரு கிட்ணி மாத்தியே ஆகோணும். யாராவது கிட்னி தானம் செய்தால் மாத்தலாம்" என்றார். கமலாவிற்கு மீண்டும் அதிர்ச்சி. சிறுநீரகம் யாராவது தானம் செய்வார்களா என தேடினாள். இயலாத நிலையில் தானே தன் சிறுநீரகத்தை மகனுக்கு தானம் செய்வது என்ற முடிவுக்கு வந்தாள். வைத்தியரிடம் சென்று இதுபற்றி பேசினாள்.

அதற்கு வைத்தியரோ "அம்மா..... உங்கட பொடி வீக்கா இருக்குது........ இப்படிச் செய்தால் பாதிப்பு உங்களுக்குத்தான்" என்றார். "நான் செத்தாலும் பரவாயில்லை எண்ட மகனுக்கு ஒன்றும் நடக்கக்கூடாது" என்றவாறே தன் சிறுநீரகத்தை தானம் செய்தாள்.

சிகிச்சை நிறைவேறியது. ரோகித்தும் நல்ல படியாக கண்விழித்தான். கா.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு கஷ்டப்பட்டு படித்தான். நல்லபடியாகவே பரீட்சை நிறைவெய்தியது. பரீட்சை முடிவுகளும் வெளியாகின. ஒன்பது ஏ சித்திகளைப் பெற்றான். உச்சி குளிர்ந்த கமலா ஒரு பெரியவரின் உதவியுடன் பெரியபாடசாலையொன்றில் திறமையாக தனது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று ஏ அதியுயர் சித்திபெற்று பல்கலைக்கழகம் தெரிவானான். பாடசாலைப் பாராட்டு விழாவிற்கு ரோகித்தும் கமலாவும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மேடையில் ஏறி பாராட்டை பெற்றுக் கொண்ட ரோகித் தனது தாயை மேடையில் ஆசிர்வாதம் அளிக்க அழைத்தான். சந்தோஷத்துடன் மேடையில் ஏறிய கமலா அப்படியே நிலத்தில் வீழ்ந்து ரோகித்தின் மடியிலேயே தனது இன்னுயிரை நீத்தாள். "அம்மா.........." என்று அலறினான் ரோகித். கமலாவின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற வேளை, தன் தாயின் சிறுநீரகம் தனக்குள் இருப்பதை வைத்தியர்மூலம் அறிந்துகொண்டான் ரோகித். தன் தாயானவள் தனக்காகச் செய்த தியாகத்தை எண்ணி அழுதான் ரோகித். நான்கு வருடங்களின் பின் சிறந்த வைத்தியனாக உருவெடுத்த ரோகித் "கமலா வைத்தியசாலை" என்றொரு வைத்தியசாலையினை நிறுவி தன் தாய்க்கு தன் நன்றிகளைத் தெரிவித்தான்.

---

**சிறுகதை**

மேற் பிரிவு
ர.சஞ்சீவன்

# மீண்டும் தாய் நாட்டிற்கு

"சேமா" "சோமா" எழுந்திரு இந்த விடியலாவது நன்மையாய் அமையட்டும் எனக் கூறிக்கொண்டே படுக்கையில் இருந்த சோமனை எழுப்பினான். ராமன். அறக்கப் பறக்க சுொமன் இயந்திரம் போல் சுறுக்கென வேலைகளை முடித்து இருவருமாக எங்கோ செல்கின்றனர்.

சோமனின் தாய் நாடு இலங்கை எழில் கொஞ்சும் புத்தூர் கிரமாம். சுப்பிரமணியர், குஞ்சம்பாளின் ஒரே புதல்வன். குடும்பம்சிறியது அழகியதொரு ஒரு தோட்டம் அருகே சிறிய குடிசை. அங்குதான் சோமனின் வாழ்வும் ஆரம்பமாகியது. சோமன் க.பொ.த உயர்தரம் வரை நன்கு கற்றவன். பின்னர் படிப்பை கைவிட்டவன். மோட்டர் வாகனம், ஊர்சுற்றதல் போன்ற சிற்றின்பங்களை அனுபவிக்கத் தொடங்கினான். தந்தையோ சதாராண விவசாயி. ஒரோ மகன் என்பதற்காக கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுத்தார். மகனுக்கு வெளிநாட்டு ஆசையும் வந்துவிட்டது.

தாய் தந்தையிடம் அடம்பிடித்து தான் கட்டார் சென்று உழைப்பதாக கூறினான். மகனின் விருப்பத்தை ஈடேற்ற விரும்பிய சுப்பிரமணிர் தனது தோட்டத்தைவிற்று பணம் கொடுத்து அனுப்பி வைத்தார். மகனைப் பிரிந்த குஞ்சம்மாளுக்குரோ தலையிடி. ராஜாவாக வாழ்ந்த தன் மகன் அங்கு மழையிலும் வெய்யிலிலும் என்ன செய்கின்றானோ? என்ற ஏக்கம். இவ்வாறான ஏக்கத்தின் மத்தியில் வந்தவன்தான் சோமன்.

இலங்கையிலே சாவகச்சேரிப் பகுதியில் இருந்து வந்தவன் ராமன். ஏழு தங்கையரின் மூத்த அண்ணன். நிலையறிந்து பாடுபட்டு உழைக்க வேண்டும் என்பதற்காக கட்டாரில் வேலை செய்ய வந்தவன். எங்கிருந்தோ வந்த இருவரும் ஒரு தங்குமிடத்திலே நல்ல நண்பர்களாகி விட்டனர். தாய்நாடு விட்டு வந்து ஒரு மாத காலம் ஆகிறது. தேடிப் பார்க்கினும் வேலை கிடைக்கவில்லை. கொண்டு வந்த பணமும் முடியும் தறுவாயில் ஒவ்வொரு விடியல்களும் அவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்தது. இன்றும் அந்த விடியலை வரவேற்று இருவரும் வேலை தேடச் செல்கின்றனர்.

மாலையாகிறது சூரியன் மறைகின்றான் இருண்ட முகத்துடன் வந்து உட்காருகின்றான் சோமன். தன்னிலை எண்ணி வெம்பி வெம்பி அழுகின்றான். ஞாபகங்கள் பட்டாம்பூச்சியென என்னுள்ளே சிறகடித்து அங்குமிங்குமாய் பறந்து திரிகின்றன. தயா், தந்தையரின் முகஙக்ள் கண்முன்னே வந்து வந்து போகின்றன. ஓ என கதறி அழுகின்றான். அழுது கொண்டிருக்கையில் ஓடி வருகிறான் ராமன். "நண்பா" "நண்பா" "எனக்கு ஒரு சாப்பாட்டு கடையில வேலை கிடைத்துள்ளது" என மகிழ்ச்சி பொங்க கூறினான். தனக்கு வேலை கிடைத்தது போல சோபன் ராமனை னகட்டித் தழுவினான். "உன் கஸ்ரங்கள் எல்லாம் பஞ்சென பறக்கப் போகின்றன" என கூறினான் தனக்கு வேலை கிடைக்காமல்போனதையும் கூறி வருத்தமடைந்தான்.

இவ்வாறு நாட்கள் உருண்டோடின. ராமன் தான் வேலை செய்யும் முதலாளியிடம் கதைத்து சோபனுக்கும் வேலை வாங்கி கொடுத்தான். ஆயினும் தான் சாப்பாட்டு கடையில் வேலை புரிவதை தன் பெற்றோர் கேட்டால் மனமுடைந்து போவார்கள் என எண்ணி சோபன் சொல்லாமலேயே இருந்து வந்தான்.

சோபன் அந்த கடையில் வேலை செய்ய ஆரம்பித்ததில் இரந்து அந்த முதலாளியை நன்கு அவதானித்து வந்தான். முதலாளி சொந்தமாக கடையை வைத்திருக்கின்றார். தனது சொந்த தோட்டத்திலிருந்து காய்கறிகளைப் பறித்து உணவு சமைத்து விற்கிறார். சொந்தமாக பண்ணை வைத்துள்ளார். இவர் சுமார் ஐம்பது வயது நிரம்பிய ஒரு வயோதிபரே. ஒரு வயோதிபராலே இவ்வளவு செய்யமுடிகின்றது என்றால் எல்ல வளமும் உள்ள என்னால் என் செய்ய முடியாது.

இந்த விடயத்தை நண்பர் ராமனிடமும் கூறினான். இதை ராமனும் ஏற்றுக்கொண்டான். இங்கு உழைப்பதைவிட சகல வளங்களும் பொருந்திய நம் நாட்டுக்கு சென்று சொந்த உழைப்பில் உழைத்து வாழ்வது பெருமையே என எண்ணி இருவரும் தாய்நாட்டிற்கு திரும்பினர்.

இன்று சாவகச்சேரி சந்தையில் பிரபல வியாபாரியாக ராமன் விளங்குகின்றான். தனது தங்கைகளையும் சிறப்புற பேணி வருகின்றான். தனது கஷ்ட உழைப்பால் விற்ற தோட்டத்தை பெற்று பெரியதோரு விவசாயியாக சோபன் விளங்குகின்றான். தனது தாய் தந்தையரை உட்கார வைத்து பராமரித்து வருகின்றான்.

மனிதன் வெளிநாட்டு வாழ்வுக்கு ஆசைப்பட பலதரப்பட்ட காரணங்கள் காணப்பட்டாலும் நம் நாட்டின் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தினால் வாழ்வில் வெற்றி பெறலாம். வெளிநாடு சென்றளவிற்கு மீட்டு நம் நாட்டை எண்ணிப்பார்த்து மண்ணில் வந்த மழை மீண்டும் விண்ணை நோக்குவது போன்றது.

கவிதை

# வெற்றி மாலை

மத்திய பிரிவு
பா.சாருஜன்

வெற்றி என்பது எளிதல்ல
தோல்வி என்பது முடிவல்ல
வெற்றியின் படிகள் சறுக்கினாலும்
தோல்வியை கண்டு துவண்டு விடாதே

தமிழ் அன்னை ஈன்ற தமிழ் மகன்கள் நாம்
தமிழ் மொழி வாழ வழிசெய்வோம்
தடைகள் யாவற்றையும் தகர்த்தெறிந்து
தமிழுக்கு வெற்றிவாகை சூட வழிவகுப்போம்.

ஈழத்தில் நிகழ்ந்த மகாயுத்தம்
வரலாற்றில் இடம்பெற வழி சமைப்போம்
தமிழரின் விடிவை நோக்கிய பயணம்
என்று முடியுமோ தெரியவில்லை

வெற்றி கரங்களை நீட்டி
வீரத்தாய் நித்தம் அழைக்கின்றாள் பாரினிலே
வெற்றிமாலை அணிந்தவராய்
என்று திகழ்வோமோ தெரியவில்லை

நாட்டில் நடைபெறும் சீர்கோடுகள்
தமிழரின் வீழ்ச்சியின் அடையாளமே
நாடு நலம் பெற – நம் நாட்டை
தமிழர் மீண்டெழுந்து ஆழ வேண்டும்.

அன்று எழுந்த தமிழர்களின் வீரம்
இன்று எங்கு சென்றதோ தெரியவில்லை
தமிழ் இனம் அடி பணிந்து விட்டாலும்
தமிழரின் வீரம் அடிபணிய இல்லை

வெற்றி திலகம் அணிந்தவனாய்
நாடாளும் எம் விரோதிகள்
அழிக்க முடியாத எம் இனத்தை
சூழ்ச்சியால் வென்றார்களோ

சூரியன் என்றும் அணைவதில்லை
பறவைகள் என்றும் அழுவதில்லை
தமிழினம் என்றும் தோற்காது
தமிழரின் வாழ்வும் பொய்க்காது

வெற்றி கொடியை ஊன்றி – தமிழர்
வெறி மாலையை சூடிக்கொள்வர்
வெற்றிக் கனியை சுவைத்தவராய்
ஈழத்தை ஆழ் மீண்டெழுவர்.

கவிதை

# வெற்றி மாலை

மேற் பிரிவு
யூ.லக்ஷனா

நாடிப்புலன்கள் உழுவார் கரமும்
நயவுரைகள் தேடிக் கொழுக்கும்
அறிவாளர் நெஞ்சம் உவந்து
நடமாடிக் களிக்கும் கலாப மயிலே...
எல்லாம் வல்ல கலைவாணியின் பாதார விந்தங்களை வணங்குகின்றேன்

மீண்டெழு
நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமும்
சிதைத்து தமிழ் மண்ணை அழிக்கும்
கொடியவர்களை அழிக்க
ஈழ நாடே, மீண்டெழு...

கொலை கொள்ளை கற்பழிப்பு
என நாளுக்கு நாள்
மண்ணுக்குள் மடியும் உயிர்களின்
ஆத்மா சாந்தியடைய
தமிழ் இரத்த துயர் போக்க
ஈழ தமிழரே தமிழை வளர்க்க மீண்டெழு...

ஈன செயல்களால் அப்பாவி
பெண்ணினத்தை அழிக்கும் கயவர்களுக்கு
நல்ல பாடம் புகட்ட
நாட்டு தமிழினமே மீண்டெழு...
தாய் நாட்டை காப்பற்ற மீண்டெழு...

அந்நியரின் ஆட்சிக்குள்
அடிமைப்படும் தமிழினமே
உன் மொழியும், கலாச்சாரமும்
பண்பாடும் கலையும்
உலகமே பேசியது
நீ அடிமைப்பட்டால் தமிழுக்கே இழுக்கு
மாண்டவரின் உரிமையை
மீண்டெக்குக அகில
தமிழ் இரத்தமே கொதித்து மீண்டெழு...

உன் மொழியும் மதமும் பண்பும்
பாரதமும் முதல் அகிலமே பேசியது
செந்தமிழுக்கு மணி சூடி

ஈன பிறவிகளை அழித்து
ஆட்சியை நாட்டில் நிலைக்க
செந்தமிழே மீண்டெழு...

சேர! சோழ, பாண்டிய மன்னர்களின்
இரத்தத்தில் ஊறியது உன் தமிழ்
ஔவையார் முதல் ஆறுமுக நாவலர் வரை
படைப்பாளிகளின் நாவிலே நர்த்தனம் ஆடியது.
உன் தமிழ்
உனக்கு தோல்வியுண்டா
ஈழநாட்டுத் தமிழரே
உன் விடிவுக்காக மீண்டெழு...
உன் வளர்ச்சியில் நீ
நாட்டையே தமிழ் பண்பாட்டில்
ஊற வைத்து விடலாம்
பின் தாய் நாட்டு மக்களின் வாழ்வு விடிவடையும்
மக்களின் விடியலுக்காக
தமிழ் நாடே மீண்டெழு...

கயவர்களால் இழக்கப்படுவது
உன் இரத்த உறவே
உன் நாடு விடிவது உன்கையில்
உனக்குள் ஆட்சியை நிலைநாட்ட
மீண்டெழு தமிழ்நாடே மீண்டெழு...

எனவே உன் வாழ்க்கை உன் கையில்
உன் உரிமையை வென்றெடுக்க
உன் வாழ்வை அர்த்த முள்ளதாக்க
உன்னை தைரியப்படுத்த
தமிழ் பாரம்பரியத்தை பாதுகாகக்க
கட்டியெழுப்ப மீண்டெழு....
தமிழ் நாடே மீண்டெழு...

# My Village

M.Adchaya
Junior

The name of my village is Ariyalai. It is situated in Jaffna district in the Nothern Province. There is an interesting fact related to the name of my village. There are many rice mills in my village. In the past Rice mills are called as 'Arisi allai' in Tamil. The word arisi alai changed as Arialai. That is a story related to the name of my village.

My village is full of greenery. There are many green trees, paddy fields and gardens in my village. My village looks like a green carpet.

In ariyalai, east there are many paddy fields and ponds which give us fresh air. There are many schools, temples, churches, community centers and shops in my village. Many Educatianalists and well performed people in arts, many famous sportsman live in my village. There are peace and unity in our village.

The special celebration of my village is 'Ariyalai National Day celebration' It is being celebrated for last ninety eight years by all communities in my village. Before Ariyalai national day final celebration we have many competitions like eassay competition, dictation competition and speech competation in both Tamil and English languages. We have our national day celebration on sihhala and Tamil New Year day.

---

# My Country

Inter
S.Abinaja

I love my village very much. I feel "I am a lucky girl to have such a nice village like ariyalai" I will serve in my village in future. My Country is Sri Lanka. and it is situated in Asia. It is a south Asian country. The nearest neibours are India and maldives.

Many varieties of people live in Sri Lanka they are sinhalese, Tamils, Muslims and Christians. The national flag contains a lion wich is having a sward in its leg, green and orange lines, a yellow border.

There are above 2 crore people live in Srilanka. The national flower is lilly and the national tree is naa tree. Volleyball is the national game of SriLanka and national animal is the giant squirrel.

It is a fast growing country. It has 25 districts and 9 provinces. It is an island which is in the Indian Ocean. It has fast growing economy. The currency of Sri Lanka is Sri Lankan rupees and cents. Hundred cents make up a rupee. The main export things are tea. coco. rubber, dresses and sea leaches. The Sri Lankan tea is famous in the foreign countries. The economy contains paddy and fishing.

Sri Lanka has two weather seasons which are cold season and hot season. Many fruits and vegetables are growing in hill countries and fishing, paddy are done in other sides of country. Tea and rubber is are always growing in hill sides of Sri Lanka. The nationality of Sri Lanka is called Sri Lankans.

The current president is Mithiripala Srisenna and the current Priminister is Ranil Wigramasinga. The Sri Lankan Parliament contains 225 members. 126 members are selected in public election and the precedent is always elected by people in public election.

Sri Lanka has many landscape such as rivers, hills, mountain, ponds, waterfalls and forests. The highest mountain of Srilanka is Pethuruthalagale, and the highest waterfall is Bambaragantha. and most beautiful waterfalls are Thungintha and thiyalumma. Sripatha mountain is worshiped by many pepole such as hindus, buddhists and muslims. The longest river of Sri Lanka is mahawali. Laxsabana waterfall is a main source of water electricity. The victoria. Hothmele, Rantenigala dams help to carry on the water which produces electricity.

The Tamil people mostly live in Northern province and muslim people live in eastern province sinhala people live in other provinces. Many small islands are in Sri Lanka. Delft, mannar are some of these islands.

Many tourist attractive places are in SriLanka. The main income of Sri Lanka consists of export and tourism. The touerist attractive places are sigiriya hill, beaches, Higgaduwa coral reeve, temples, Haggala botanical garden, beaches hills etc. The hill countries are favored by many tourists.

The biggest rain forest of Sri Lanka is siharaja rainforest. The tourists come in Apirl to september season to enjoy in Sri Lanka. The major society is buddhists and minor society is muslims.

Sri Lanka is a pretty and beautiful country. It contains many landscaps. I love my country very much.

# The Advantages of Social Media

Senior
S.Thulashikan

In this fast moving world the social media plays a major role, By the entry of social media in the present era, the world has been arrested inside the pockets of the people. That means the people of this era are mad with these social media Many people of this century have lost their thumb prints by this social media with the use of mobile phones. We can have a clear contact with the social media with the mobile phones.

Even a baby in the womb also knows about social media. If we ask it after the entry to the world about social media, it will simply tell 'The resource which update new things and the past news about this society and galaxy as well, is called social media, such as news channels, Facebook, Twitter, viber, whats app, Goole, yahoo and so and so. These things are good enough for an introduction about social media .

If we consider about the advantages of social media, its in a vast amount and its in an uncountable number, that means it has an end at the infinitive point. The major and the most important advantage is, it plays a major role in communication, that means the simple talk between two or a group of people from this, people came to know about the news in the society incidents. which happens around their surroundings and their personalty. The needy people are fulfilling their needs by the help of the social media. The needy people post their needs in these channels and the kind hearted people willingly come to help them, Even some groups are there to fulfill the needy people's needs. A man in Ariyalai. simply comes to know about the situation and the current news in Australia. People enjoy cricket, football, Elle matches which are happening at somewhere while thy are at their mess of people to know the news has been increased rapidly. There are a lot of advantages from the social media other than these, but the time is not quiet enough for it.

Though there are a lot of advantages, some disadvantages are a there. Here the Newtons third law 'Every directions has an opposite reaction direction which is equal in magnitude and opposite in direction han been failed. So according to Newiton's law the advantages should be equal to and disadvantages. Be the truth is the advantages are in Ton (100) and the advantages are in the prco (10 -12). So the advantages of social media are so much bigger than disadvantages. So we can use the social media and should derive the maximum advantages as much as possible.

# 97வதுசுதேசிய தின கொண்டாட்ட விழா - 2016

## 14.04.2016 செயலாளர் வழங்கிய நன்றியுரை

மேடையில் அமர்ந்திருக்கும் பெரியார்களுக்கும் இங்கு குழுமியிருக்கும் சுதேசிகளுக்கும் எனது வணக்கங்கள்.

எனது நன்றியுரை சிறிது நீண்டதாகவே இருக்கும். ஏனெனில் "காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்ற வகையில் எனது சொல்லுக்கடங்காத வகையில் பலரும் தோள் கொடுத்தே இன்றைய இறுதிக்கலை விழா இன்று சிறப்புற முடிவுறும் கட்டத்தை அடைந்துள்ளது. எல்லாவற்றும் முன்னதாக Shakespeare கூறியது போல "Lend me your ears" ஏனெனில் உங்கள் காதுகள் வேறு வேலைகள் செய்யாதிருக்கட்டும்.

முதலாவதாக எனது நன்றிகள் எமது இன்றைய பிரமாண்டான இறுதிநாள் கலை நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மாநகரசபை ஆணையாளர் திரு. பொன்னம்பலம் வாகீசன், திருமதி வாகீசன் அவர்களுக்கு. நாம் அவர்களை அணுகிய போது நான் உணர்ந்து கொண்டது அவருடைய எளிமை! இவ்வளவு வேலைப் பழுவிலும் எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இதுவரை எம்முடன் இருந்து கௌரவித்தமைக்கும் பரிசளித்து எமது போட்டியாளர்களை ஊக்குவித்தமைக்கு திரு.வாகீசன் அவர்களுக்கும், திருமதி வாகீசனுக்கு அவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது சிறப்பு விருந்தினர் திரு. அருளம்பலம் ஜெயபாலன் அவர்கள் பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ளார். அவரது வேலைப்பழுவின் மத்தியிலும் இன்றைய தினத்தை எமக்கு ஒதுக்கியமைக்கு எமது நன்றிகள். அதுமட்டுமன்றி முன்னைய விழாக்களுக்கு பிரதம விருந்தினராக, சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்ட கலாபூஷணம் உருத்திரேஸ்வரன் அவர்கள், S.K.சண்முகலிங்கம் அவர்கள், திரு.ம.அன்ரனிப்பிள்ளை அவர்கள் ஆகியோருக்கு ஏற்கனவே நன்றிகள் கூறப்பட்டாலும் இந்த இடத்தில் நினைவுகூர நான் கடமைப்பட்டவள் ஆகின்றேன்.

அடுத்ததாக எனது நன்றிகள் இந்த நிகழ்வை சிறப்புற நடாத்துவதற்கு முக்கிய காரணமாக இருந்த எமது நடுவர் குழாம். 151 போட்டியாளர்கள் (Super Singer தவிர ) 84 கலைப்போட்டிகள், 11 குழு விளையாட்டுப் போட்டிகள் (பல சுற்றுக்கள்),Super Singer 6 சுற்றுக்கள்), இத்தனையிலும் நடுவர்களாக (refrees) ஆக வந்து அனைவருமே அர்ப்பணிப்புடன் சேவையாற்றி உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் விழாக்குழுவின் நன்றிகள்.

மேலும்...

1. அறிவிப்பாளராக கடமையாற்றிய திரு.S.வினோத் - திரு.கு.பிரதீபன் Super Singer இறுதி சுற்றின் போது அறிவிப்பாளராக கடமையாற்றிய திரு.S.விபூசன் ஆகியோருக்கும்.

2) மங்கல இசையை வருடா வருடம் இலவசமாக வழங்கும் அரியாலை யசோதரன் புதல்வர்கள் காண்டீபன், நவஜீவன் ஆகியோருக்கும்

3) செல்வி தரணிகா அவர்கள் தேவாரம் சுதேசிய கீதம் மட்டுமல்லாமல் கலைப்போட்டிகளில் உதவியாளராக கடமையாற்றியமைக்கும்

4) கௌரவிப்போருக்குரிய வாழ்த்துப்பாக்களுக்கான கவியாக்கங்களை தந்துதவிய கவிஞர். ஐ.சிவதாஸன் அவர்களுக்கும்

5) அழகாக அதனை மடலில் அச்சிட்டும் மாணவர்களின் மெடல்களை Print பண்ணியும் உதவிய திரு. விஸ்வநாதன் பாலரூபன் அவர்களுக்கும்

6) எமது கௌரவிப்பை ஏற்றுக் கொண்ட பெரியோர்களான

திருமதி. குமுதினி வசந்தரூபா

திரு. கனகரட்ணம் பாலேந்திரா

திரு. V.K அரசரட்ணம்

திரு. சிவலோகநாதன் கணேஸ்வரன் ஆகியோருக்கும்

மாணவர்களான

த. ஆத்மன்

சிவேஸ்கர்

தனுஸ்திகா ஆகியோருக்கும் நன்றிகள்.

8) உள்ளூரில் ஒலிபெருக்கி வசதி தந்த திரு மயூரன் அவர்களுக்கும்,

9) மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு - அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் - traffic சேவை வழங்கி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும்

10) 97வதுவிழா மலரை சிறப்பாக அச்சமத்துதவிய மெகா பதிப்பகத்திற்கும்

11) Super Singer banner, Programme Notice என்பவற்றை, sponsor செய்த shabesh Graphics and cargo service நிறுவனத்திற்கும்

12) வண்ணமயமான வாண வேடிக்கை நிகழ்வுகளை சிறப்பாக நடத்தும் Disney fire works நீர்கொழும்பு நிறுவனத்துக்கும்

13) 12.04.2016 அன்று நடன நிகழ்ச்சியை வழங்கிய ஏழிசை மிருதங்க நர்த்தலாய இயக்குனர்கள் திரு. திருமதி கண்ணதாஸ் அவர்களுக்கும்

14) விழாவின் பிரமாண்டமான நிகழ்வான தெய்வப்பாவை நாடகத்தை நெறியாள்கை செய்த திரு. ப ஸ்ரீஸ்கந்தன், நாடகப் பொறுப்பாளர் திரு. சடகோபன் ஆகியோருக்கும்

15) Sound சேவையை வழங்கிய அரியாலை Shopi Sound நிறுவனத்தினருக்கும். ஒளியமைப்பை வழங்கிய Royal Sounds இற்கும்

16) ஒளிப்படம் படப்பிடிப்பு (Photos & Videos) வசதிகளை கேட்டபொழுதெல்லாம் தயங்காது வழங்கிய கௌரி டிஜிற்றல் போட்டோ அன் வீடியோ Gowribalan அவர்களுக்கும்

17) மிக முக்கியமாக எமது சகல நடவடிக்கைகளிலும் ஒன்று சேர்ந்து உழைத்த எமது நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் குறிப்பாக

97வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா தலைவர் - திரு. ந.சுதேஸ்குமார், சகல விளையாட்டுப் போட்டிகளையும் சிறப்பாக நடத்தியமைக்காகவும், பொருளாளர் திரு வை. கிருபாகரன் தேவையான பணத்தினை சேகரித்து உதவியமைக்கும், அனுசரனையாளர்களைத் தயார் செய்ததற்கும் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் கலைச் செயலாளர் திரு. பா.மோகன்ஜித் மற்றும் கலைத்தலைவர் தலைவர் திரு சி.செல்வரத்தினம் அவர்களுக்கும் கலைக்குழு உறுப்பினர்கள் திருமதி.ச.திருஞானம், திருமதிசா.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு கலைப் போட்டிளை சிறப்பாக நடத்தியமைக்கும் சகல விளையாட்டு நிகழ்வுகளுக்கு உதவிய திரு. செ.சத்தியசீலன் அவர்களுக்கும், விசேடமாக குறிப்பிடக்கூடிய வகையில் எமக்கெல்லாம் ஆலோசர்களாக வழிநடத்திய சிரேஸ்ட தலைவர் திரு. அ.உபயசேகரம், திரு. செ.பத்மநாதன், கலாநிதி.சு.மோகனதாஸ், திரு.S.T பத்மநாதன், திரு.சு.சண்முகரட்ணம் ஆகியோருக்கும் போட்டிகளின் போது உதவிய விளையாட்டு உப செயலாளர் திரு.செ.மதியழகன் அவர்களுக்கும் முன்னயை விழாக்குழு உறுப்பினர்களுக்கும் குறிப்பாக செல்வன் த.பிரணவராவ் அவர்களுக்கும் எனது நன்றிகள்

18) மேற்கூறிய சகல உறுப்பினர்களுக்கும் அவர்களது வாழ்க்கைத் துணைகளுக்கும் முக்கியமாக எனது நன்றிகள்

19) நேரடியாகக் கேட்காவிட்டாலும் தொலைபேசி மூலம் கேட்ட சந்தர்ப்பத்திலேயே உடனடியாகவே முன்வந்து உதவி செய்த சகல அரியாலை வாசிகளுக்கும், வெளிநாட்டில் வாழும் எமது அரியாலை விசுவாசிகளுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

20) நூற்றாண்டை நோக்கிய ஆதர்ஷ பயணத்தை ஆரம்பித்துள்ளோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வீறுநடைபோட வேண்டும். எம்மிடையே தனிப்பட்ட கௌரவ சிக்கல்கள் இன்றி முன்னேற வேண்டும்.

21) இச்சந்தர்ப்பத்தில் நான் யாரையாவது நன்றி கூற தவறவிட்டிருந்தால் பெருமனது கொண்டு மன்னித்து ஏற்றுக்கொள்ளவும். மேலும் கௌரவிப்பை ஏற்றுக்கொண்ட பெரியோருக்கும் கௌரவிப்பு நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வளவு நிகழ்வுகளையும் ஒருங்கிணைக்க நடாத்த பணபலம் புரிந்த எமதூர் சுதேசிகள் அனைவருக்கும், புத்தகத்திற்கு அனுசரணை தந்த வர்த்தக நிறுவனங்களுக்கும், முக்கியமாக வெளிநாட்டில் வசித்தாலும் நாட்டுப் பற்றில் சிறந்த எமதூர் வாசிகள் – நோர்வே வாழ் மக்கள் மன்றம் குறிப்பாக ச.அகிலன், நேதாஜி, த. குகநாதன், ரவீந்திரன் போன்றோருக்கும் இங்கிலாந்து அரியாலை வாசிகளை ஒருங்கிணைத்த திரு. அருளம்பலம் சிவபாலன் அவர்களுக்கும் கனடா மக்களை ஒருங்கிணைத்த திரு. ப.ஸ்ரீஸ்கந்தன் அவர்களுக்கும், பிரான்ஸ் மக்களுடைய தொடர்பாடலுக்கு உதவிய திரு. ப.சிவானந்தன் அவர்களுக்கும் எமது நன்றிகள். உண்மையில் வெளிநாட்டில் உள்ளவர்கள் படும் சிரமங்கள் யாவும் எங்களால் உணர முடிகிறது. முக்கியமான கருத்தை முன் வைக்கலாம் என எண்ணுகிறேன் – ஏனைய நாடுகளிலும் எமது அரியாலை சுதேசிகள் வாழ்கின்றார்கள். இப்பொழுது நாம் நூற்றாண்டை நோக்கிய ஒரு ஆதர்ஷ பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம். எனவே ஜேர்மனி, US, America, சுவிற்சலாந்து, Australia, Singapore, மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளில் உள்வர்களும் இணைய வேண்டும். அவ்வாறு இணையும் பொழுது எமது விழா மேலும் சிறப்புறும். எமக்கு உதவி வழங்கும் வெளிநாட்டவர்களது விபரங்களும் வருடா வருட ஆண்டு மலரில் வெளியிடப்படும்.

அடுத்து இம் மலர் சிறப்பாக அமைய ஆசிச் செய்தி வாழ்த்துச் செய்தி வழங்கியவர்களுக்கும் , இம்மலருக்கான விடயங்களைத் தந்துதவிய திரு. ப. மோகன்ஜித் திரு. வை. கிருபாகரன் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

கலைப்போட்டிகளை நடாத்த அனுமதி தந்த ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபர், கலைப்போட்டிகளுக்கும், விளையாட்டுப்போட்டிகளுக்கும் உதவிகளை வழங்கிய எமது சனசமூக நிலையங்கள் போன்வற்றிற்கும், போட்டியாளர்களுக்கும், பெற்றோருக்கும், Super singer சுற்றுகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய சரஸ்வதி ச. ச. நி, அருணோதயா ச. ச. நி , நாவலடி உதயஒளி ச. ச. நி , அரியாலை திருமகள் ச. ச. நி , அரியாலை சனசமூக நிலையம் போன்றவற்றிற்கும் பாடகர்களை ஊக்குவித்த ரசிகர்களுக்கும், நடுவர்களாக கடமை ஆற்றிய கண்ணன் முரளி, யாழ் ரமணன் ஆகியோருக்கும் எனது நன்றிகள். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களை ஊக்குவிக்க வரதராஜன் எழுதிய புத்தங்களை அன்பளிப்பு செய்த Eng. இரகுநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

**திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமாரசாமி**
**செயலாளர்**

**அரியாலை 97ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்குழு**

## விழா மலர் அனுசரணை : ஐக்கிய இராச்சியம் (England) எமது அரியாலையூர் மக்கள்

1. Arulampalam Sivapalan
2. Thiruganasunthram Chandrasegaram
3. M.P.Nathan
4. S.C.Bavan
5. Sathananthan Gopinath
6. Thevarasa Surenthiran
7. Giri Kirishnapillai
8. Somasegaram Archana
9. Namasivayam Selvarajah
10. Mas.Kegan,Miss Paula Kaneshanathan
11. Kumarasamy Gengatharan
12. Thevarasan Arunan
13. Subramaniyam Nirmalan
14. Rasiah Nimalathas
15. Nallathamby Nagulraj
16. Kandiah Nadarajah
17. Kandiah Manickaratnam
18. Sathananthan Premnath
19. Sathananthan Ragunath
20. Seevaratnam Jeeventhra
21. Sellathurai Rajaruban
22. Arulampalam Jeyachanthiran
23. Manoharan Thevanath
24. Namasivayam Uruthireswaran
25. Sinnakkuddy Thevarasa
26. Banda Gunasena
27. Muthukirishnapillai Ganes
28. Thiruganasuntharam Ganasegaram
29. Somasunthram Ganeshalingam
30. Sunthram Kumaraguru
31. Sathananthm Vimalraj
32. Mylvaganam Viyayakumar
33. Iyathurai Mahenthiran
34. Mrs.G.Mahenthiran
35. Arumugam /sutharsanan
36. K.S.N Mahendran
37. Arulampalam Thanapalan
38. K.Surendra
39. Mrs.Jude Muhuntha

## 100 ஆவதுஅரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழாஆலோசனை குழு ( 100th Ariyalai National Day Celebration Advosary Body )

இவ்வாலோசனை 98வது அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழா நிர்வாக குழுவானது தெரிவு செய்யும் வருடாந்தப் பொதுக்கூட்டம் 05.02.2017ம் திகதி அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது, 100 ஆவது அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட விழாவினை உரிய திட்மிடலின் கீழ், மிகச்சிறப்பாக நடாத்துவதற்கு முன்னேற்பாடாக" 100 ஆவது அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழாஆலோசனை குழு" (100th Ariyalai National Day Celebration Advosary Body ) ஒன்றினை உருவாக்கவேண்டும் எனவும் அதற்குரிய அங்கத்தவர்களையும் தெரிவுசெய்யப்படவேண்டும் எனவும் ஏகோபித்த தீர்மானத்தின் அடிப்படையில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1. திரு. S.T.பத்மநாதன் (Mr. S.T Padmanathan)
2. திரு. ப. பஞ்சலிங்கம் (Mr. P. Panchalingam)
3. திரு. பேராசிரியர். சு. மோகனதாஸ் (Prof. S. Mohanathas)
4. திரு. செ. புத்மநாதன் ( Mr. C. Pathmanathan)
5. திரு. அ. உபயசேகரம் ( Mr. A. Upayasekaram)
6. திரு. சு. சண்முகரட்ணம் ( Mr. S. Shanmugaratnam)

இவ் ஆலோசனைச் குழுவுக்கு இணைப்பாளராகதிரு. சு. சண்முகரட்ணம் அவர்கள் செயற்படுவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் குழுவின் முதலாவது ஆலோசனைக் கூட்டம் 21.02.2017ம் திகதியும் இரண்டாவது கூட்டம் 28.02.2017ம் திகதியும் அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய முன்பள்ளிமண்டபத்தில் நடைபெற்றன.

முதலாவது கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல் பின்வருமாறுவரையறுக்கப்பட்டது.

i. இவ்வாலோசனைக் குழுவின் நோக்கம் பற்றி ஆராய்தல்
ii. தற்போது செய்யவேண்டிய அவசரமான விடயங்களை ஆராய்தல்
iii. 100 ஆவது சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழா தொடர்பான நீண்டநாள் விடயங்களை ஆராய்தல்
    a. யாப்புரீதியானதிருத்தங்கள் சம்பந்தமாகஆலோசனை
    b. ஆவணங்கள் ,மற்றும் நினைவுப் பொருட்கள் என்பவற்றை ஒன்று சேர்த்தலும் ,களஞ்சியப்படுத்தலும்.
    c. மற்றும் நலன்விரும்பிகளை பொதுக்கூட்டத்தில் அழைத்து ஆலோசனைகள் மற்றும் தகவல்களைப் ென்நாள் விழாத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் பறுதல்

iv. 100 ஆவது அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழாவின் நிருவாகக் கட்டமைப்பினை விரிவாக்குதலும செயல்படுத்துதலும் மேலேயுள்ள நிகழ்ச்சிநிரலுக்குஏற்ப இவ் முதலாவது ஆலோசனைக்கூட்டம் நடைபெற்று பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 100 ஆவது அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழாவினை சிறப்பாக நடாத்தி முடிப்பதற்காக சகலதரப்பினிடமிருந்தும் ஒத்துழைப்பினையும் ,ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளுதல்

2) இவ்வாலோசனைக்கூட்டம் 2 கிழமைக்குஒருமுறைசகலஆலோசனைசக் குழு அங்கத்தவர்களும் பங்குபற்றுவதற்கு ஏற்ப நடாத்துதல் வேண்டும்

3) இவ்வாலோசனைக் குழுவிற்கு எனத் தனியான கடிதத்தலைப்பு ( Letter Head) தமிழ்,ஆங்கிலம் என்னும் இருமொழிகள் இடம் பெறக்கூடியதாக தயாரிக்கப்படுவதுடன் அதில் 6 அங்கத்தவர்களதுபெயருடன். கையடக்கத் தொலைபேசி இலக்கம் இடம்பெறல் வேண்டுமென்றும், இதற்கு இனைப்பாளராக உள்ளதிரு. சு. சண்முகரட்ணம் அவர்களது முகவரியும் பொறிக்கப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4) இக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் அறிவித்தல்கள் போன்றவிபரங்களை மென்பொதியில் தயார் செய்து ஒரு செயலாளர் போல கடமையாற்றுவதற்கு திரு. ஜெயபாலன் ஜசிந்தன் அவர்களை நியமிப்பது

5) இதற்கெனமின் அஞ்சல் இலக்கமாக ariyalai_nationalday@gamil.com எனவும் முகப்புத்தக இல (Facebook) www.Facebook.com/groups/532134900153704 எனவும் உருவாக்கப்பட்ட சர்வதேசரீதியாக தொடர்புகளை வைத்திருக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

6) அரியாலைசுதேசியதிருநாட் கொண்டாட்டவிழா நலன்விரும்பிகள் 150 பேர் ஒப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்ட 10.05.2015ம்திகதி கடிதம் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சுருக்கமாகபின்வருமாறு:

a) மருவிவரும் கலைஆர்வத்தைவளர்க்கும் முகமாகவும், மாணவர்களுக்கு கலை ஆர்வத்தைதூண்டும் முகமாகவும் பொதுவான இடத்தில் கலைவகுப்புக்களை ஆரம்பிப்பது.

b) 100 ஆவதுஅரியாலைசுதேசியதிருநாட் கொண்டாட்டவிழாவின் நினைவுக் கட்டிடமாகசுதேசியத்திற்கெனஒருதனியானகட்டிடம் அமைத்தல்

இதுவிடயமாக 28.02.2017ல் நடைபெறவுள்ளஆலோசனைக் கூட்டத்தில் இதில் ஒப்பமிட்டஒருசிலரைஅழைத்துபூரணமானவிரங்களைப் பெறுதல் எனவும் தீர்மானிக்கப்பட்டது

அடுத்து 28.02.2017 ம் திகதிநடைபெற்ற இரண்டாவது ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:

1. நலன்புரிக்கிளையினால் அனுப்பிவைக்கப்பட்ட 15.05.2015ம் திகதி கடிதம் சம்பந்தமாக அந் நலன்விரும்பிகளிடமிருந்து விரிவானவிபரங்கள் பெறப்பட்டு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. நிரந்தரக் கட்டிடம் அமைப்பது தொடர்பாககாடிப் போக்குக் காட இருந்த இடம் அல்லது நாவலர் வீதியில் அமைந்துள்ள தர்மலிங்கம் அவர்களின் மரக்காலை அமைந்திருந்த காணிகளை பயன்படுத்துவது.

3. பொதுவான இடத்தில் கொழும்பில் உள்ளதமிழ் சங்கம் போல கலைகளை வளர்ப்பதுடன் மற்றும் பாடசாலைப் பாடங்களையும் இலவசமாக கற்பித்து, அரியாலைஊர் மக்களை முன்னேற்றுவது.

4. அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்ட விழா சம்பந்தமான ஆவணங்கள், நினைவுப் பொருட்கள், படங்கள், நாடகப்பிரதிகள், போன்றஆவணங்கள் வைத்திருப்பவர்களிடமிருந்து அவற்றினைப் பெற்று ஆவணப்படுத்துவதற்கு உரிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் வேண்டும். அதற்கான உரிய நலன்விரும்பிகளிடமிருந்து இவ் ஆவணங்களை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

5. கடந்த கால அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்ட விழா தலைவர்கள் செயலாளர்கள், பொருளாளர்கள், ஆகியோரை அழைப்பித்து ,ஒருபொதுக்கூட்டத்தினை நடாத்தி. ஆவர்களிடமிருந்து இவ்விழா சம்பந்தமான ஆலோசனைகளைப் பெறுவதற்குஉரிய கூட்டத்தினை கூட்டுமாறு இணைப்பாளருக்குபணிக்கப்பட்டது.

6. எனவே100 ஆவது அரியாலை சுதேசியதிருநாட் கொண்டாட்டவிழா சிற்புறுவதற்கு ஏற்ற சகலவகையிலுமான உதவிகள் ஆலோசனைகள் என்பவற்றினை மின்அஞ்சல் மூலமோ, முகப்புத்தகத்தின் ( Face Book ) மூலமோநலன்விரும்பிகள் யாவரும் அனுப்பிவைக்கலாம் என இச்குழு எதிர்பார்கின்றது.

..........................................

சு. சண்முகரட்ணம்
இணைப்பாளர்
42,காட்டுக்கந்தோர் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

# 98வதுசுதேசிய தின கொண்டாட்ட விழா - 2017

## விழாக்குழுவின் நன்றியுரை

- 98ஆவது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சிறப்பாக நடைபெற சரீர உதவி, பண உதவி, புரிந்தவர்களுக்கும், பரிசில்களை அன்பளிப்புச் செய்தவர்களுக்கும்,
- வெளிநாட்டில் வாழும் அரியாலையூர் நண்பர்களுக்கும்,
- இம்மலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி, ஆக்கம் தந்துதவர்களுக்கும்,
- பெரிய மனதோடு விளம்பர உதவி புரிந்த வர்த்தக நிறுவனங்களுக்கும்
- விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகளை நடாத்துவதற்கு அனுமதி தந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டுச் சங்கங்கள், கலைப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகளுக்கு நடுவர்களாகவும், தீர்ப்பாளராகவும் கடமையாற்றியவர்களுக்கும், வினாப்பத்திரங்களை தயாரிப்பதற்கும் அவற்றை மதிப்பீடு செய்ய உதவியவர்களுக்கும், சகல போட்டிகளிலும் பங்குபற்றிய போட்டியாளர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும்
- விழாவைச் சிறப்பித்த பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள்,போன்ற பெரியோர்களுக்கும், பார்வையாளர்களுக்கும்,
- நல்ல முறையில் ஒளி, ஒலி அமைத்துத்தந்த அனைத்து அமைப்பாளர்களுக்கும்
- விழாச்சிறப்புற எம்மோடு தோளோடு தோள் கொடுத்து உதவிய பெரியவர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்களுக்கும்
- விழா மலரை சிறப்பாக அழகுற அச்சிட்டுத்தந்த ஸ்ரீ மாருதி பதிப்பகத்தனருக்கும்
- அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

நிர்வாகம்

98வது அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா








ஸ்ரீ மாருதி பதிப்பகம் 0777917680